# மண்

யேர்மனி/2017 இதழ் 186

கார்த்திகை-மார்கழி (1990 – 2017)

Novomber/Dezember



வாழும்போதே வாழ்த்தப்பட வேண்டியவர்

மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி - அவுஸ்திரேலியா



யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மூத்த எழுத்தாளர்கள்

கௌரவிப்பு விழா நிகழ்வு 14-10-2017



# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து...

இலங்கைத் தீவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களில் கூடுதலானவர்கள் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களே என்று சனத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே கடுமையான வறுமைச் சூழலுக்குள் சிக்கியுள்ளன. அதிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18.2 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் இதை அரசாங்கமும் சரி, வட மாகாணசபையும் சரி, மக்கள் பிரதிநிகள் என்று சொல்லப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களும் சரி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சரி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் சரி, புலம்பெயர்ந்தோர் சமூகத்தின் அமைப்புகளும் சரி, சர்வதேச சமூகமும் சரிபிற தமிழ்க்கட்சிகளும் சரி கவனத்திற் கொள்ளவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், மாவட்டங்கள் என்ற வகையில் இதற்குத் தனியான கவனமெடுத்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இதைச் செய்யாமல், இவை "பொய்யுரைக்கும்" அரசியலையே செய்தன. இன்றும் அதையே செய்து கொண்டிருக்கின்றன. மகிந்த அரசாங்கத்திலும் மைத்திரி - ரணில் கூட்டரசாங்கத்திலும் "மீள்குடியேற்ற அமைச்சு", "புனர்வாழ்வு அமைச்சு" என்று இரண்டு அமைச்சுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

வடக்கு மாகாணசபை இந்தப் பழியிலிருந்து தப்பிவிட முடியாது. மக்கள் பட்டினியில் கிடந்து வாடுகிறார்கள். பிள்ளைகள் படிக்க வழியில்லாமல் அவதிப்படுகிறார்கள். மாகாணசபை உறுப்பினர்கள் சால்வையும் வெள்ளை வேட்டியுமாக நின்று தீர்மானத்திருவிழா நடத்துகிறார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்று முழுதாகவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவை. யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ள இன்றைய நிலையில், சனங்கள் இன்னும் இயல்பு நிலையை எட்டவில்லை. வறுமையைத் தாண்டவில்லை. மீள்நிலையை எட்டமுடியாமலுள்ளனர் என்றால், இதற்கான பொறுப்பு சகலருக்கும் உரியதல்லவா. வடக்குக் கிழக்கில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு மேல் உடல் உறுப்புகளை இழந்த நிலையில் உள்ளனர்.இவர்களின் குடும்பங்கள் சரியான பொருளாதாரத்தை எட்டமுடியாத நிலையில் சிக்கியுள்ளன. இன்னொரு தொகுதியினர் எழுந்து

நடமாடவே முடியாத படுக்கை நிலையிலுள்ள முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள். அல்லது இரண்டு காலும் இல்லாதவர்கள். இரண்டு கையும் இல்லாதவர்கள். இரண்டு கண்ணும் பாதிக்கப்பட்டவர்கள் என சுயாதீனமாகச் செயற்பட முடியாதவர்கள். இவைதவிர, உயிரிழப்புக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 60,000 ஆயிரத்துக்கு மேல். இந்தக் குடும்பங்களுக்கெல்லாம் எட்டு ஆண்டுகளாகியும் நட்ட ஈடு கிடைக்கவில்லை.

இவை ஒருபுறம் தமிழ்ப் பகுதிகள் எங்கும் கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள், போதை பழக்கம் அதிகரிப்பு, கல்விநிலை பாதிப்பு எனச் சமூகச் சீர்கேடுகளும் என்றுமில்லாதவாறு தலைதூக்கிவருவதை தடுத்துநிறுத்த முடியாமல் சமூகநலவிரும்பிகள் திண்டாடுகின்றனர். சிறப்புமிக்க நீதிபதியான இளஞ்செழியன் அவர்கள் கடும் நடவடிக்கைகளும் நல்ல தீர்ப்புகளை வழங்கிவந்தாலும் சமூகச் சீர்கேடுகளை இல்லாமல் செய்வது என்பது மிகவும் கடுமையான விடையமாகத்தான் அங்கு இருந்து வருகின்றது. இவ்வாறு இந்த மக்களின் வாழ்க்கை நிலை பல வழியிலும் மிக மிக மோசமாகவே உள்ளது. இதற்குப் பிரதான காரணம், அரசியல் தீர்வைப்பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியலாளர்களின் பொறுப்பின்மையாகும். இது அரசியலைச் சரியாகப் புரிந்து கொள்ளாத குருட்டுத்தனம். சமூக அக்கறையற்ற இதயங்களின் வெளிப்பாடு. சனங்களைப் பற்றிச் சிந்திக்காதவர்கள் தவறு.

விடுதலை என்பது அனைத்தையும் உள்ளடக்கியதே. மக்கள் பசியிலும் பட்டினியிலும் வாடிக்கொண்டிருக்கும்போது, ஏனையவற்றைப் பற்றிய அக்கறைகள் இல்லாமற் போய்விடும். பசி வந்தால் பத்தும் பறந்தும் போய் விடும் என்று முன்னோர் சொன்னது இதனால்தான். இதை மனங்கொண்டே விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து விடுதலை இயக்கங்களும் அரசியற் தீர்வைப் பற்றிய பேச்சுகளில் இயல்பு நிலை உருவாக்கத்தையும் மக்கள் முன்னேற்றத்தையும் பேச்சுமேசைகளின் முன்நிபந்தனையாக முன்வைத்தன. இதற்குக் காரணம், இவை அனைத்தும் மக்களை மனதார நேசித்ததே. இன்றைய அரசியல் இத்தகைய பண்பைக் கொள்ள வேண்டும். அதுவே முழுமையான விடுதலையைத் தரும் என்பது தீர்வாகும்.

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்...




## நன்மை கடைப்பிடி:-

காலையில் துயில் எழுந்ததும் நீ என்ன செய்கிறாய்?..வீட்டில் கடவுள் படங்கள் இருந்தால் முதலில் அத்தெய்வத் திருவுருவங்களைப் பார்த்துவிட்டு அதன்பிறகே காலைக் கடன்களை முடிக்க முற்படுவாய் இல்லையா?.. சிலர் பாடசாலைக்குப் போகுமுன் அருகில் கோவில் இருந்தால் அங்கு போய் தெய்வ தரிசனம் செய்வார்கள். சிலர் பாடசாலையிலிருந்து வீடு திரும்பியதும மாலையில் கோவிலுக்குப் போவார்கள். இப்படித் தினமும் காலையிலோ மாலையிலோ ஆலயம் சென்று ஆண்டவனைத் தரிசிப்பதனால் உங்கள் மனதில் தூய எண்ணங்கள் உண்டாகும். மனம் தூய்மையானால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். ஆரோக்கிய வாழ்வில் நன்மைகளோ ஏராளம். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

## நாடு ஒப்பன செய்:-

நமது முன்னோர் நல்லது கெட்டது எவை  எவை என இனம்பிரித்துக் காட்டியிருக்கிறார்கள். நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். கெட்ட காரியங்களை ஒதுக்க வேண்டும். இதுவே மறை. நல்ல காரியங்களைச் செய்வதினால் உன்னை எல்லோரும் பாராட்டுவார்கள், மதிப்பார்கள், கௌரவிப்பார்கள். இதற்கு மாறாகக் கெட்ட காரியங்களைச் செய்தால் உன்னை வெறுப்பார்கள். உன் செயலை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உன்னைச் சமூகத்திலிருந்து ஒதுக்குவார்கள். அதனால் உன் வாழ்க்கையில் சங்கடங்கள் ஏற்படும். ஆகவே நாட்டிலுள்ளவர்கள் ஏற்கும் படியான, ஒத்துக்கொள்ளக்கூடிய நல்ல காரியங்களையே நீ செய்ய வேண்டும். அதனால் உன்னைப் பலரும் நேசிப்பார்கள். உன் வாழ்வு சிறப்புறவே நாட்டிலுள்ளோர் விரும்புவதைச் செய் என்கிறார் தமிழ்ப்பாட்டி.

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

௫௪ நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை.
ஒருவனுடைய மனம் அறியாது வஞ்சனைச் செயல் ஏதும் இல்லையாம். மனம் அறியாத வஞ்சனை ஏதும் இல்லை.

௫௫ நேரா நோன்பு சீராகாது...
மனம் பொருந்திச் செய்யாத விரதம் ஒழுங்காகாது.. மனத்தினால் உடன்படாத நோன்பு சீர் பெறாது.

௫௬ நைபவன் எனினும் நொய்ய உரையேல்..
கேட்பவர் எதிர்த்துப் பேசச் சக்தியற்றவர் என்றாலும் மனம் வருந்தும்படியான அற்ப மொழிகளைக் கூறாதே. அதாவது கேட்பவர் மனம் வருந்தும்படியாக அற்பமான வார்த்தைகளைப் பேசலாகாது.

௫௭ நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்...
சிறியவர் என்று கருதப்படுவோரும் ஒரு காலத்தில் பெரியவராகிவிடுவார். உருவத்தால் ஒருவர் சிறியவராகக் காணப்படினும் செய்யும் காரியத்தினால் ஒருபோதும் அவர் பெரியவராவார்.

௫௮ நோன்பு என்பது கொன்று தின்னாமை
விரதம் என்று சொல்லப்படுவது ஓர் உயிரைக் கொன்று அதன் மாமிசத்தை உண்ணாமல் இருப்பதுவே

௫௯ பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்...
ஒருவன் செய்த பயிரின் விளைச்சலைப் பார்த்தால் போதும் அவன் செய்த புண்ணியம் தெரிந்துவிடும்.

௬௦ பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்..
பாலுடன் கலந்த உணவை உண்பதாக இருந்தாலும் உண்ணத்தகுந்த காலத்தை அறிந்து உண்ணல் வேண்டும்.

# கடவுளின் வரம்...

ஓர் பெரிய மரத்தின் உச்சியில் தேன்கூடு ஒன்று அமைந்திருந்தது. அதில் உள்ள தேனிக்களின் தலைவியாகிய ராணித் தேனிக்குக் கடவுளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதனால் அது கடவுளை நினைத்துத் தவம் செய்தது. ராணித்தேனியின் தவத்தால் மகிழ்ந்த இறைவன் அதன் முன் தோன்றி "ராணித்தேனியே உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார்.
கடவுளே அதன் முன் பிரசன்னமாகி இருக்கும் போது உயர்ந்த நோக்கத்துடனான ஒரு கூடிய ஒரு வரத்தைக் கேட்கும் நல்ல எண்ணம் ராணித்தேனிக்கு ஏற்படவில்லை. "இறைவனே என்னிடமிருக்கும் தேனை நாடி வருபவர்களை நான் கொட்டி அவர்களுக்குச் சகிக்கமுடியாத வேதனையை அனுபவிக்குமாறு செய்ய வேண்டும்." இந்த வரத்தையே எனக்குத் தரவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டது.

அதனைக்கேட்ட கடவுள் மிகவும் வருத்தம் கொண்டார். "ராணித் தேனியே பிறருக்கு உதவி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு வசதியை நீ கேட்டிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். நீயோ பிறருக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே வரம் கேட்கிறாய்..நீ கேட்ட வரத்தைக் கொடுக்காமலிருக்க முடியாது. வரம் கொடுக்கும் அதே சமயம் ஒரு பாடமும் போதிக்க விரும்புகிறேன்.

என்னுடைய வரத்தின் மூலம் உனக்குக் "கொடுக்கு" ஒன்று ஏற்படும் அந்தக் கொடுக்கால் மற்றவர்களைக் கொட்டி வேதனைக்குள்ளாக்கும் போது "உனது கொடுக்கின் நுனி" உன்னால் கொட்டப்படுபவர்களின் உடலில் தொற்றிக் கொள்ளும். உடனே நீ உயிரிழந்து விடுவாய்" இவ்வாறு கூறிவிட்டு மறைந்தார் கடவுள். தீய எண்ணங்களில் விருப்பங் கொண்டவர்கள் தாங்கள் கையாளும் தீய எண்ணங்களாலேயே அழிந்து விடுவர். எனையவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என நினைத்துச் செயற்படுபவர்களுக்கு நன்மையே வந்து சேரும்!..

செல்வி சி.ரீ கசன்றூா
ருக் மிஷன். கிளிநொச்சி

# குடை ராட்டினம்..

ஒருவர் தனது இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு களியாட்ட விழாவிற்குச் சென்றார். அங்கு ஒரு குடை ராட்டினம் இருந்தது. அவருடைய நண்பர் முல்லா குடை ராட்டினத்தில் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம் இந்த வயதில் அவர் இப்படி உல்லாசமாகச் சுற்றுகிறாரே..சிறிது நேரத்தில் அவருக்குத் திகைப்பை ஏற்படுத்திவிட்டது. ராட்டினம் நின்றவுடன் முல்லா கீழே இறங்கி வந்தார்.

சிறிது நேரத்தில் வேகமாகச் சென்று மறுபடியும் ஒரு சீட்டு எடுத்தார். மீண்டும் ராட்டினத்தில் ஏறி உட்கார்ந்தார். இது போல திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருந்தார். கடைசியில் அவர் இறங்கி வந்தபோது நண்பர் கேட்டார். "முல்லா ராட்டினத்தில் சுற்றுவதென்றால் உங்களுக்கு அவ்வளவு விருப்பமா?.." அதற்கு முல்லா சொன்னார். ஐயோ ராட்டினமோ சுத்தமாகப் பிடிக்காது...அதில் ஏறினாலோ தலை சுற்றும்" என்றார். நண்பர் கேட்டார் "அப்படியானால் ஏன் மீண்டும்..மீண்டும் ராட்டினத்தில் சுற்றினீர்கள்"

முல்லா சொன்னார் அதை ஏன் கேட்கிறீர்கள்..அந்த ராட்டினக்காரன் எனக்குப் பணம் கடன் தரவேண்டியிருக்கிறது பலமுறை கேட்டும் தரவில்லை.. அதனால்தான் ராட்டினத்தில் சுற்றியாவது கடனை வசூலித்ததாக இருக்கட்டும் என்றுதான் சுற்றினேன் என்றார். எப்படி இருக்கிறு முதலும் கடனும்.

செல்வி நிவேதா மதீஸ்குமார்
குக மிஷன் - கிளிநொச்சி

............................................................................................................................................................

நன்றிகள்....

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு

சிவகாந்த்சிவராசா
Duisburg

# இயற்கையும் மனிதனும்.......

செல்வன் வி பானுயன்
தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை
எசன்-யேர்மனி

ஒரு சராசரி மனிதன், தான் பூமியில் வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் இயற்கையே கொடுக்கின்றது. அதாவது ஒரு மனிதனானவன் 438 கனஅடி காற்றை உள்ளே இழுக்கின்றான் 23.000 தடவைகள் சுவாசிக்கின்றான் 750 தடவைகள் தசைகளை அசைக்கின்றான். ஒன்றரைக் கிலோ உணவை உட்கொள்ளுகின்றான். ஆனால் இத்தனையையும் செய்வதில் அவனுக்குக் களைப்போ, தளர்ச்சியோ ஏற்படுவதில்லை. காரணம் இவை எல்லாம் அவன் முயற்சியில் நடப்பதில்லை இவை அனைத்தும் தன்னிச்சையாகவே நிகழ்கின்றன.

இந்தச் செயல்கள் ஒவ்வொன்றையும் மனிதன் தானாகப் பிரக்ஞையோடு செய்ய வேண்டுமென்றால் ஒரு நாள் கூட வாழமுடியாது. அவனுக்குள்ளே இயற்கையாகவே இருக்கும் ஒரு கிரியா சக்தி. இவை அனைத்தையும் பார்த்துக் கொள்கிறது. அனைத்தையும் சீராகவும் ஒழுங்கு முறையுடனும் தொடர்ந்து இவை நடக்கும்படியே அவன் படைக்கப்பட்டு இருக்கிறான்.இன்னொரு முக்கிய காரணம் தன் செயல்களை இயற்கை பெரிதாக நினைப்பதோ, அதனால் சலிப்படைவதோ இல்லை. மனிதன் தன் உடல் இயக்கத்தில் இருந்தே ஏராளமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஒழுங்குமுறை, சலிப்பின்மை, எல்லாத்தடைகளையும் மீறிச் சிறப்பாகச் செயற்படுதல் போன்றவை அந்தப் பாடங்களில் அடங்கும்.

இயற்கையின் செயலில் அவசரமில்லை. அதே நேரத்தில் தேக்கமும் இல்லை. தேவையானதை தேவையான நேரத்தில் வேகத்தில் செய்கிறது. இதுவும் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப் பெரிய பாடமாகும். மனிதன் இயற்கையைப் பின்பற்றுவது முடியாத காரியமல்ல. ஏனென்றால் அவனும் இயற்கையின் படைப்பே. இயற்கையோடு ஒட்டியும் தன் இயல்பை உணர்ந்தும் செயற்பட்டால் அவன் அடையமுடியாத சிறப்பில்லை.

ஒவ்வொரு மனிதனும் இயங்கத் தேவையான நுண்ணறிவு அவன் உடலுக்கு இயல்பாகவே ஏற்படுத்தி உலகிற்கு அனுப்பி இயற்கை தன் பங்கைக் கச்சிதமாகச் செய்துவிடுகின்றது. இயற்கையிடமிருந்து கற்றுக்கொண்டு நாமும் இயற்கையோடு சிறப்பாக வாழ்வோமாக...

# பழமொழிகள் சில...

-கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்.
-விளையும் பயிரை முளையிலே தெரியும்.
-இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.
-அழுதாலும் பிள்ளை அவள்தானே பெறவேண்டும்.
-கரும்பு தின்னக் கைகூலி வேண்டுமா.
-பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போல்.
-வெண்ணெய் திரண்டுவர தாழி உடைவது போல.
-புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
-எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
-நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.
-ஆற்றிலே கரைத்தாலும் அளந்து கரை.
-நிறைகுடம் தளம்பாது குறைகுடம் தளம்பும்.
-தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு.
-அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
-கழுதை அறியுமா கற்பூர வாசனை.

# எனது அன்புத் தெய்வம்

அம்மாவே எனது தெய்வம்
பத்துமாதம் சுமந்து பெற்று
கண் துஞ்சாது எனஇனைக் காத்து
கனவிலும் கடிதல் அறியாது
அன்பையே ஊட்டி வளர்த்த
அன்புத் தெய்வம் அம்மாதான்
அம்மாவின் பாதங்களைப் பற்றினால்
தீர்ந்துவிடும் எனது துன்பங்கள்
எனது அன்புத் தெய்வம்
நீண்டநாள் நீடுழி வாழ வேண்டும்
எனது பிரார்த்தனையும் இதுவே!...

செல்வி ச.சானியா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## நூல்கள் என் கண்கள்!...

விந்தை மிகு உலகில்
வீராப்பாய் நான் சென்றிட
பகுத்தறிவுதனை
பக்குவமாய் வளர்த்திட்ட
நூல்கள் என் கண்களாகும்
என் அகத்திலும்
புறத்திலும் இருந்த இருளினை
வெளிச்சமாய் மாற்றிய நூல்கள்
என் இரு கண்களாகும்
எங்கே ஒரு நூலகம்
திறக்கப்படுகின்றதோ
அங்கே ஒரு சிறைச்சாலை
மூடப்படுகின்றது
அத்தனை மகத்துவம்
மிக்கவையே நூல்கள்
என் பள்ளிப் பருவ வயதில்
தேடல் என்னும் உணர்வினை
தேடலாக்கிய நூல்களே
என் இரு கண்கள்!...

செல்வி சிறி.சுகன்ஜா
றூத் மிஷன் - கிளிநொச்சி

## தமிழ் மொழி!...

அகிலம் போற்றும் இனிய மொழி
அகரம் முதலாய் கொண்ட மொழி
மகிழ்ந்தே பாவலர் பாடும் மொழி
மூவகை அழகு நிறைந்த மொழி!...

கல்லும் தோன்றாக் கால மொழி
கவினார் சங்கம் கண்ட மொழி
பலவகை இலக்கணம் பெற்றமொழி
பல்சுவை இலக்கியம் படைத்தமொழி

குடிமக்கள் காப்பியம் சொன்னமொழி
குழந்தை முருகன் காத்த மொழி
முடி மன்னர் மூவர் வளர்த்த மொழி
வள்ளுவர் குறளில் ஒலித்த மொழி...

செந்தமிழ் மக்கள் பேசும் மொழி
செழிப்புறு பாடல்கள் உள்ள மொழி
இந்த மண்ணில் காணும் மொழி
இனிமை பூத்த தமிழ் மொழியே!...

செல்வி தர்சிகா கண்ணன்
றூத் மிஷன் - கிளிநொச்சி

## ஒலி மரபு.......

1-ஆடு கத்தும்
2-குதிரை கனைக்கும்
3-நரி ஊளையிடும்
4-புலி உறுமும்
5-சிங்கம் கர்ச்சிக்கும
6-பூனை சீறும்
7-யானை பிளிறும்
8-எலி கீச்சிடும்
9-ஆந்தை அலறும்
10-காகம் கரையும்
11-கிளி பேசும்
12-குயில் கூவும்
13-மயில் அகவும்
14-புறா குறு குறுக்கும்

செல்வி கி யூலிகா
றூத் மிஷன்
கிளிநொச்சி

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 9

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | | | 1 |
| | | | 7 | 6 | | | | |
| | 6 | 9 | 2 | 1 | | 7 | | |
| | 3 | 6 | | | | 4 | | |
| | | | | | | | 8 | |
| 5 | 2 | | | | | | | |
| | | | 9 | | 5 | 8 | | |
| 3 | | | 1 | 2 | | | | |
| | | | | 7 | | 9 | 3 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 98

**(கார்த்திகை- மார்கழி - 2017)**

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01 -04 உலக கத்தோலிக்கர்கள் கொண்டாடும் திருநாள்.

13 -16 தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று.

வ – இ:

11 -09 வித்தியாசமான பறவை ஒன்று.

16 -15 மாதங்களில் ஒன்று.

கீ – மே:

01 -03 ஊர்வன ஒன்று.

11 -07 வட்டத்தின் விட்டம் அதன் அரைப்பகுதி.

14 -06 இந்த விளையாட்டுப் பொருள் இல்லாத நாடே இல்லை.

மே – கீ:

08 -12 கேள்வி எதிர்கருத்துச் சொல்.

13 -09 சிலர் இது சொல்வதிலும் வல்லவர்கள்

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

## வாழ்க்கைத் தத்துவங்கள்

01-அழிவைத் தருவது - ஆணவம்.
02-ஆபத்தைத் தருவது - கோபம்
03-இருக்க வேண்டியது - பணிவு
04-இருக்கக்கூடாதது - பொறாமை
05-உயர்வுக்கு வழி - உழைப்பு
06-கண்கண்ட தெய்வம் - பெற்றோர்
07-செய்ய வேண்டியது - உதவி
08-செய்யக் கூடாதது - துரோகம்
09-நம்பக்கூடாதது - வதந்தி
10-நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
11-நம்முடன் வருவது - புண்ணியம்
12-பிரியக் கூடாதது - நட்பு
13-மறக்கக்கூடாதது - நன்றி
14-மிக மிக நல்லநாள் - இன்று
15-மிகப் பெரிய தேவை - அன்பு
16-மிகக்கொடிய நோய் - பேராசை
17-மிகச் சுலபமானது - குற்றங்காணல்
18-மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
19-விலக்க வேண்டியது - விவாதம்
21-போனால் வராதது - மானம்

செல்வி யூலிகா கிருஸ்ணன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## "உ" வரிப் பழமொழிகள்

01-உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
02-உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்.
03-உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
04-உடைத்த சங்கு ஊத்துப் பறியுமா?
05-உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
06-உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும்.
07-உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது.
08-உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
09-உண்ணீர் உண்ணீரென்றே ஊட்டாதார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்.
10-உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்.

# உங்களுக்குத் தெரியுமா......

01-டொல்பின்கள் நீர்ப்பரப்பில் இருந்து 20 அடி உயரம்வரை கூடத் துள்ளிக் குதிக்கும்.

02-மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 முறை கொத்தும்.

03-சிங்கங்கள் ஒரு நாளைக்கு 20 மணிவரையும் தூங்கும். இதனால் அவை சில நேரம் ஓரிரு நாட்கள்கூட சாப்பிடாமல் கிடந்துவிடும்.

04-ஆபிரிக்காவின் பாவோபாப் என்ற மரங்களின் அடிப்பகுதி 180 அடி சுற்றளவைக் கொண்டிருக்கும். மரங்களின் உட்பகுதியை வெறுமையாக்கினால் 20 மனிதர்களை அடைக்க முடியுமாம்.

05-மனிதனின் கைகள் சுமார் 155 வகையான வேலைகளைப் புரியும்.

06-நமது கண்கள் சுமார் ஒரு லட்சம் வர்ணங்களைப் பிரித்தறியும்.

07-நமது எலும்பின் வலிமை இரும்பைவிட வலிமையானது.

08-கணனியைவிட மனிதனின் மூளை ஒரு லட்சம் மடங்கு நினைவுத் திறனுடையது.

09-பன்டா கரடி இனம் ஒரே நாளில் 14 - 18 கிலோவரை உணவுகளைச் சாப்பிடும். இது அதன் எடையில் 40 சதவிகிதமாகும்.

10-இரவில் தமது உணவைத் தேடும் உயிரினங்களில் சில ஆந்தை, வௌவால், மரநாய்

செல்வி சிறீ. கீர்த்தனா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# பெற்றோர்களே கட்டாயம் இதை படிக்கவும்....

-குழந்தைகளின் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும்.
-பல சவால்கள் நிறைந்த இந்த உலகத்தில், எத்தனை தடைகள் வந்தாலும் அதை எப்படி எதிர்கொள்வது என்பதை கட்டாயம் கற்றுக் கொடுத்தாக வேண்டும்.
-பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியவை
குறும்புகள் அதிகம் உள்ள குழந்தைகள் அதிகமாக சேட்டைகள் செய்யும். எனவே அந்த குழந்தைகளிடம் பள்ளிக்குச் செல்லவில்லை என்றால் டீச்சர் அடிப்பாங்க என்று அவர்களை பயம் காட்டக் கூடாது. ஏனெனில் பள்ளிக்கு சென்றால் டீச்சர்கள் நம்மை துன்புறுத்துவார்கள் என்று குழந்தைகளின் மனதில் தோன்றும்.
-குழந்தைகள் சரியாக படிக்கவில்லை என்றால் அவர்களை அடித்து மிரட்டாமல், எந்த பாடம் புரியவில்லை என்று கேட்டு அவர்களுக்கு அன்பாக சொல்லிக் கொடுக்க வேண்டும்.
-பெற்றோர்கள், தங்களை தவிர வேற்று நபர்களிடம் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை சொல்லிக் கொடுத்து, குழந்தைகளிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
-குழந்தைகள் பள்ளிகளில் மற்ற மாணவர்களுடன் போட்டிகள் போடும் போது, அது ஆரோக்கியமான போட்டியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
-பள்ளிகளில், தங்கள் குழந்தைகளின் படிப்பு மற்றும் மற்ற பழக்க வழக்கங்களை பற்றி அடிக்கடி கேட்டு தெரிந்துக் கொள்ள வேண்டும்.
-குழந்தைகள் பள்ளி செல்லும் போது, அவர்களின் பையில், நமது வீட்டின் விலாசம், தொலைபேசி நம்பர் உள்ள கார்டை மறக்காமல் வைக்க வேண்டும். ஏனெனில் குழந்தைகள் காணாமல் போய்விட்டால், அந்த கார்ட் பயன்படும்.
-பெற்றோர்களை தவிர முகம் தெரியாத வேறு நபர்கள் யாரேனும் அழைத்தால், அவர்களுடன் போகக்கூடாது என்று பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
-பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு தங்க நகைகளை அதிகமாக போட்டு அனுப்பக் கூடாது. ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதில் இருந்து தன்னை எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பதை பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும்.
-பள்ளிகளில் மற்ற மாணவர்களுடன் சண்டை போடாமல் அன்பாகவும், நட்பாகவும் பழக வேண்டும் என்பதை பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும்

# இரட்டைக்கிளவி.....

இரட்டைக்கிளவி என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒருதன்மைப்பட்டு நின்று வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள்உணர்த்தி வருவதாகும். இது இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது.

நீர் சலசல என ஓடிற்று.
மரம் மடமட என முறிந்தது.
கலகலப்பான பேச்சு
கடகட என சிரித்தான்
முல்லை கமகம என மணந்தது
கரகரத்த குரலில் பேசினான்
பேத்தி கிச்சுக்கிச்சு மூட்டினாள்
கிசுகிசு ஒன்றை கேட்டேன்
கிடுகிடு பள்ளம் பார்த்தேன்
கிளுகிளு படம் பார்த்தாராம்
கிறுகிறு என்று தலை சுற்றியது
கீசுக்கீசு என குருவிகள் கத்தின
குசுகுசு என்று அதை சொன்னார்
குடுகுடு கிழவர் வந்தார்
குபுகுபு என குருதி கொட்டியது
கும்கும் என்றும் குத்தினார்
குற்ற நெஞ்சம் குறுகுறுத்தது
சோறு கொழகொழ ஆனது
கொழுகொழு என்று குட்டி
சதசத என்ற சேற்றில் விழுந்தேன்
சரசர என்று மான்கள் ஓடின
சவசவ என்று முகம் சிவந்தது
சாரைசாரையாக மக்கள் வந்தனர்
சிலுசிலு என காற்று வீசியது
சுடசுட தோசைக் கொடுத்தாள்
சொரசொரப்பான தாடி
தகதக மின்னும் மேனி
தடதட என் கதவைத் தட்டினான்
தரதர என்று இழுத்து சென்றான்
தளதள என்று ததும்பும் பருவம்
நெஞ்சம்திக்குத்திக்குஎன துடித்தது
திடுதிடு என நுழைந்தான்
திபுதிபு என மக்கள் புகுந்தனர்
திருதிரு என விழித்தான்
துறுதுறு என்ற விழிகள்
தெய தெய என்று ஆடினாள்
தொளதொள எனசட்டை அணிந்தார்
நறநற என பல்லைக் கடித்தான்
நைநை என்று அழுதாள்
பக்குப்பக்கு என்றுநெஞ்சு அடிக்கும்
படபட என இமைகள் கொட்டும்
பரபரப்பு அடைந்தது ஊர்
பளபள என்று பாறை மின்னியது
பிசுபிசுத்தது போராட்டம்
பேந்தப்பேந்த விழித்தான்
பொதபொத பன்றியின் வயிறு
பொலபொலஎனகண்ணீர் வடித்தாள்
மாங்குமாங்குஎன்றுவேலை
செய்தால் போதுமா?

# குறளும் பொருளும்

**வெகுளாமை:-**

301\. சொல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

302\. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

303\. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

304\. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

305 தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

306\. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னு
மேமப் புணையைச் சுடும்.

307\. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

308\. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

309\. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

310\. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

# குறளும் பொருளும் (கோபம் கொள்ளாமை)

301 தன் கோபம் சொல்லுமிடத்தில் தடுப்பவன் அருளாளன் ஆவான். செல்லாத இடத்தில் தடுத்தால் என்ன?..விட்டால் என்ன?..

302. தன்னைவிட வலியவரிடம் கோபம் கொண்டால் தீமை உண்டாகும். மெலியவரிடம் கோபித்தால் அதைவிடக் கேட்டை உண்டாகும்.

303. கோபத்தை மனதில் கொள்வதால் எல்லாத் தீமைகளும் உண்டாகும். அதனால் கோபம் கொள்வதை மறந்துவிட வேண்டும்.

304. சிரிப்பையும் மன மகிழ்வையும் அழிக்கும் கோபத்தைப் போன்ற பகை வேறு இல்லை.

305. ஒருவன் தன்னைத் துன்பத்திலிருந்து காத்துக்கொள்ள கோபத்தை அடக்க வேண்டும். இல்லாவிட்டால் கோபித்தவனையே அது அழித்துவிடும்.

306. மனதில் கோபம் கொண்டவனை அது அழிப்பதுடன் அவனது உறவினரையும் பாதுகாப்பாளரையும் அழித்துவிடும்.

307. நிலத்தை அறைந்தவன் கை தப்பாமல் நிலத்தில் மோதுவது போன்று மனதில் கோபத்தைக் கொண்டவன் துன்பத்தைத் தவறாமல் அடைவான்.

308. பெருந்தீயால் தன்னைச் சுடுவது போன்ற துன்பத்தை ஒருவன் செய்தாலும் அவன்மேல் கோபங்கொள்ளாது இருப்பது நல்லது

309. மனத்தில் கோபத்தை நினைக்காதவன் தான் அடைய நினைத்த நன்மைகள் எல்லாவற்றையும் அடைவான்.

310. கோபத்தை உள்ளத்தில் கொண்டவர் இறந்தவராவர். அதை மனத்திலிருந்து விட்டவர் இறப்பைத் தவிர்த்தவராவர்.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## நட்பு:-

சேவல் கூவியது "நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது"...என்று கதிரவன் பூரித்துப் போனான். மாலை வந்தது. கதிரவன் மேற்குத் திசையின் மூலையில் கவிழ்ந்தான் சாயும் போது "நான் விழுகின்றேன் என்னைத் தாங்க யாரும் வரமாட்டார்களா" என்று ஏங்கினான். சேவலை அவன் எதிர்பார்த்தான். வரவில்லை. விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான்.

"எழும்போது தாங்க வருகிறவனெல்லாம்
விழும்போது தாங்க வருவதில்லை"

## காலம்:-

குருவிக்கூடு சிறகு முளைக்காத குருவிக் குஞ்சுகள் சிரித்து ஆரவாரித்தன. மரத்தில் இருந்த அணில் குருவிக்கூட்டுக்குத் தாவி "உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை. சுதந்திரம் இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு" என்று கேட்டது. குஞ்சுகள் கவனிக்கவில்லை. பாம்புக்கு இது வாய்ப்பானது. குஞ்சுகளின் சிரிப்பொலி கேட்டு, பாம்பு கூட்டுக்குள் நுழைந்தது. நொடிப் பொழுதில் பாம்பின் வாயில் குஞ்சுகள் இரையாகிப் போயின. அணிலுக்கோ துயரம் தாங்கவில்லை. அது மீண்டும் இரைந்து கத்தியது...


"சிறகுவிரி பிறகு சிரி"

# கிறிஸ்து பிறப்பு

உலகிலே படைக்கப்பட்ட உயிர்களை அன்பு செய்ய இறைவன் மகனாய் இயேசுவை அனுப்பிய நாள் அன்பினால் அகிலத்தை ஆளும் இறைவன் மனிதனுக்காய் மனுவுரு எடுத்தநாள். மக்களைப் பாவத்தினின்று மீட்கத் தன்னுயிரையே தற்கொடையாகத் தந்தநாள். "உன்னைப்போல் அனைவரையும் நேசி" என்று போதித்த இறைமகன் தவழ்ந்த நாள். மனித மீட்புக்காய் விடியலுக்காய் அலையும் எம் மக்களுக்கு அமைதியும் நிறைவும் கொடுக்க அன்னைமரியாள் மடியில் அற்புதமாக அவதரித்தநாள்.

இந்நாளை முழுமனதுடன் வரவேற்போம். மன மகிழ்வுடன் கொண்டாடுவோம். பாலன் பிறப்பை ஏனைய நட்புக்கள் உறவுகளோடு எளிமையாகக் கொண்டாடுவோம். இல்லாதோருக்குக் கொடுத்து இன்புறுவோம். பிறக்கின்ற புத்தாண்டில் மன அமைதியுடன் கூடிய நிறைவான வாழ்வு பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் புதுவருடத்தை வரவேற்போம்!...

## இயேசுபாலன் வருகை!...



மாதமோ மார்கழி தினமோ இருபத்தைந்து
அன்னை மடியில் அற்புதமாய் உதித்தவரே
பனிக் குளிரில் பெத்தலேமில் பிறந்தவரே
பாவிகளின் துன்பம்அகற்றிடப் பாலகனானவரே
விண்ணும் மண்ணும் போற்றிடத் திகழ்ந்தவரே
ஆதரவு அற்றோருக்கு அடைக்கலமானவரே
அகிலம் முழுவதிற்கும் அன்புத் தெய்வமானவரே
பாரம் சுமந்தோருக்கு சுமைதாங்கியாய்
பாலகன் யேசுவாய் உலகில் பிறந்திட்டாரே
இந்நாளில் அன்புள்ளங்கள் பண்புகள் பெருகி
அனைவர் இல்லங்களிலும் உள்ளங்களிலும்
விழா எடுப்போம் சமாதானம் வேண்டி நிற்போம்!..

திருமதி.ஜெயா நடேசன் - யேர்மனி

# குறுக்கெழுத்துப்போட்டி-160
## (கார்த்திகை-மார்கழி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-04 அகில உலகத்தால் போற்றப்படும் தலைவர்(இறந்துவிட்டார்)

09-11 யேர்மனியர்கள் இது கட்டுவதிலும் திறமைசாலிகள்.

16-19 மனைவிக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு

30-31 ஊர்வன ஒன்று

36-37 இசைக்கருவி ஒன்று

46-48 நடுப்பகுதி என்றும் பொருள்படும்.

வ-இ

06-04 இஸ்லாமியக் கடவுளை இப்படி அழைப்பார்கள்.

13-11 சந்தர்ப்பம் அளிக்கும் இடத்தை இப்படியும் அழைப்பார்கள்.

28-22 வாழ்வியலுக்கு வழிவகுத்த பெருந்தகை.

39-37 அன்பு என்று பொருள்படும்.

44-43 உறவுக்காரர் இவர்.

கீ-மே

26-05 தான தர்மம் செய்பவர் இவர்.

28-07 நாம் எது செய்தாலும் இப்படியாகச் செய்தால் அதிக பலன் கிடைக்கும்.

43-22 தாய் மண்ணுக்காக உயிர் துறந்தவர்கள்.

46-3 மிருகம் ஒன்று.

46-32 குடும்பத்தில் ஒருத்தர்.

மே-கீ

01-22 இலங்கையில் வறண்ட மாவட்டம்

06-20 எதிலி ஒத்தசொல்.

20-48 லட்டுக்குப் பெயர்போன இந்தியக் கோவில் அமைந்துள்ள இடம்.

26-40 தமிழர்களுக்கு உணவளித்துவரும் பெருநிலப்பகுதி.

28-49 கரையக்கூடிய பொருட்களை இப்படி அழைப்பார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# முக்கிய சில நிகழ்வுகள்... (கார்த்திகை-மார்கழி மாதம்)

## இலங்கை

10.11.1993-பூநகரி தவளைப்பாய்ச்சல் விடுதலைப்புலிகளின் சரித்திர முக்கியத்துவ தாக்குதல் சுமார் 469 விடுதலைப்புலிகள் இறந்தனர்.

13.11.1999-யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம்மீது இலங்கைப்படைகள் விமானத்தாக்குதல் 10பேர்வரை பலி.

16.11.1606-இலங்கையில் முதன் முதல் போத்துக்கேசர் காலடி வைத்த நாள்.

16.11.1948-மலையகத் தமிழர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்ட நாள்.

16.11.1992-இலங்கை கடற்படைத் தளபதியான கிளான்ஸி பெர்னாண்டோ மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானநாள்.

19.11.1991-விடுதலைப் புலிகளின் தமிழீழ காவற்றுறை ஆரம்பிக்கப்பட்ட நாள்.

19.11.1984-வடபிராந்திய இராணுவத்தளபதி பிரிகேடியர் ஆரியப்பெருமா கண்ணிவெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட நாள்.

20.11.1999-மடு தேவாலயம் மீது விமானப்படைகளின் குண்டுத்தாக்குதல் 42 பேர் பலியானார்கள்.

23.11.1990-மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட நாள்.

27.11.1982-லெப்டினன் சங்கர் நினைவு நாள். பின்னர் மாவீரர் நாளாக மாற்றம் பெற்றது.

01.12.1936-இலங்கையில் முதன்முதல் விமானம் இரத்மலானையில் தரையிறக்கப்பட்டது.

06.12.0000-றம்ழான் திருநாள்.

07.12.1997-விடுதலைப்புலிகளால் "தமிழ்நெட்" என்ற இணையத்தளம் அறிமுகமானது.

12.12.1911-புலோலியூர் நா.கதிரவேற்பிள்ளையால் உருவாக்கப்பட்ட உலகின் முதல் "தமிழ் அகராதி" டில்லியில் வெளியிடப்பட்டது.

19.12.2000-மிருசுவில் படுகொலைகள் இடம்பெற்ற நாள் சுமார் 60 பேர்வரைஇலங்கைப்படைகளால் கொல்லப்பட்டனர்.

25.12.0000-நத்தார் பண்டிகை.

26.12.2004-சுனாமி இயற்கைப் பேரழி நாள்.

30.12.1924-யாழ் வாலிபர் சங்க மகாநாட்டில் முதன் முதல் சாதி ஒழிப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்ட நாள்.

## பிரபலங்கள்...

04.11.1988-கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் நினைவுநாள். (1905-1988)

07.11.1947-பத்திரிகைத்துறைக்கு உழைத்த மலையகத் தலைவர் நடேசய்யர் நினைவுநாள்.

08.11.1958-வித்துவ சிரோன்மணி ச. கணேசய்யர் நினைவு நாள்.

10.11.1934-தேசப்பற்றாளர் பேராசிரியர் அ.துரைராசா பிறந்தநாள் (10.11.1934-11.06.1994)

22.11.1976-பாராளுமன்ற உறுப்பினர் மு.திருச்செல்வம் நினைவுநாள்(1907-1976)

23.11.1973-பாராளுமன்ற உறுப்பினர் வி அ. அழகக்கோன் நினைவுநாள்.

25.11.1979-பெல்ஜியம் தமிழறிஞர் டெரி நினைவுநாள் (1898-1979)

26.11.1930-சேர் பொன் இராமநாதன் நினைவநாள் (1851-1930)

05.12.1879-ஆறுமுகநாவலர் நினைவுநாள் (18.12.1822-05.12.1879)

06.12.1982-பேராசிரியர் க.கைலாசபதி நினைவுநாள். (06.04.1933-06.12.1982)

17.12.1975-புலோலியூர் சோ.இளமுருகனார் நினைவுநாள் (11.06.1908-17.12.1975)

## கண்டுபிடிப்புகள்-நிகழ்வுகள்.. (கார்த்திகை--மார்கழி)

01.11.1954-பிரான்ஸ் நாடு பாண்டிச்சேரியை இந்தியாவிடம் ஒப்படைத்த நாள்.

03.11.1916-விற்றமின் "B" யை அமெரிக்காவைச் சேர்ந்த மக்கொரியூம் என்பவர் கண்டுபிடித்தார்.

07.11.1917-ரஷ்ஷியாவில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமாகியது.

12.11.1492-கொலம்பஸ் அமெரிக்காவைப் போய்ச் சேர்ந்த நாள்.

14.11.0000-உலக நீரழிவு தினம்.

14.11.1922-பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட நாள்.

14.11.1869-பிரான்ஸ் நாட்டவரான புவோடின் என்பவர் "டேபைன் வாயு" வைக் கண்டுபிடித்தார்.

17.11.1869-சுவீஸ் கால்வாய் ஊடாக முதன் முதல் கப்பல் பயணம் ஆரம்பித்த நாள்.

18.11.1935-தொலைக்காட்சி நிகழ்ச்சியை முதன் முதல் ஒளிபரப்பிய நாடு ஜேர்மனியாகும். தலைநகர் பேர்ளின் நகரில் வாரத்திற்கு 3 தடவைகள் ஒளிபரப்பாகியது.

20.11.1290-முதன் முதலில் மூக்குக்கண்லாடி இத்தாலி நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
21.11.1913-உலகின் மிகப்பெரிய திரைப்படத்துறையான "ஹொலிவூட்" ஆரம்பம்.
25.11.0000-உலகப்பெண்கள் மீதான வன்முறை ஒழிப்புநாள்.
30.11.1997-பிரித்தானிய அட்சியில் இருந்த ஹொங் கொங் நாடு சீனாவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்ட நாள்.

01.12.0000-உலக எயிட்ஸ் தினம்.
03.12.1840-இங்கிலாந்தில் முதன்முதலில் வெளியிட்ட "பென்னி" தபால் முத்திரைதான் உலகின் முதலாவது முத்திரையாகும்.
09.12.1510-முதன் முதல் ஆபிரிக்க மக்கள்அடிமைகளாகக் கரிபியன் தீவுகளுக்குக் கப்பல்மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.
10.12.0000-சர்வதேச மனித உரிமைகள் தினம்.
11.12.1665-இங்கிலாந்து விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் புவியீர்ப்புக் கொள்கையைக் கண்டுபிடித்தார்.
16.12.0640-பாராசீகர்களால் காற்றாடி கண்டுபிடிக்கப்பட்டது.
18.12.1897-அமெரிக்கரான கிங் சீ கில்லட் என்பவர் முதன் முதல் முகச்சவரக்கத்தியை உருவாக்கினார்.
19.12.1848-முதன் முதல் கம்யூனிசக் கொள்கை ஜேர்மனியரான கார்ல்மாக்ஸ் என்பவரால் வெளியிடப்பட்டது.
20.12.1916-அமெரிக்கப் பெண்மணி மார்க்கிறட் என்பவர் முதலாவது குடும்பக்கட்டுப்பாட்டு மருத்துவ மனையை ஆரம்பித்தார்.
22.12.1950-உலகின் முதலாவது அணுக்குண்டுப் பரிசோதனை பசுபிக் சமுத்திரத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.
23.12.1907-அமெரிக்கரான ஸ்பங்கர் என்பவர் தூசு, துகள்களை சுத்தப்படுத்தும் வக்கீம் கிளீனரைக் கண்டுபிடித்தார்.
27.12.1855-ஜேர்மனியரான புன்சன் என்பவர் முதன் முதலில் எரிவாயுவைக் கண்டுபிடித்தார்.
29.12.1972-அமெரிக்கரான வன்டஸசல் என்பவர் முதன் முதலில் சிறிய கையடக்கமான இலத்திரனியல் கல்குலேட்டரைக் கண்டுபிடித்தார்.

## உலகப்பிரபலங்கள்...

01.11.1959-எம்.கே.தியாகராஜபகவதர் நினைவுநாள் (1910-1959)
02.11.1950-அறிஞர் பேனார்ஷா நினைவுநாள்
14.11.1889-இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு பிறந்தநாள்.
18.11.1936-கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரப்பிள்ளை நினைவுநாள் (05.09.1872-18.11.1936)
19.11.1917-இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி பிறந்தநாள்

19.11.1917-இந்திய ஜான்ஸிராணி (லக்ஸ்மிபாய்) பிறந்தநாள்.

21.11.1970-பௌதீக விஞ்ஞானி, நோபல் பரிசு பெற்ற தமிழ்நாட்டுத் தமிழர் சேர் சீ வி இராமன் நினைவுநாள்.

22.11.1963-அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி நினைவுநாள்.

23.11.000-சத்ய சாயிபாபா ஜயந்தி தினம்.

30.11.1874-இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் பிறந்தநாள் (1874-1965)

05.12.2013-விடுதலை வீரன், தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி நெல்சன் மண்டலே நினைவு தினம்.

06.12.1956-இந்தி கரிசனமக்களின் தலைவர். இந்தியாவின் அரசியல் யாப்பை வரைந்தவர் டாக்டர் அம்பேத்கார் நினைவுநாள்.

10.12.1833-நோபல் பரிசுக்கு வித்திடடவர் சுவீடன் நாட்டவரான அல்பிரட் நோபல் பிறந்தநாள் (1833-1896)

11.12.1822-மகாகவி பாரதியார் பிறந்ததினம் (1882-1921)

12.12.0000-நபிகள் நாயகம் பிறந்தநாள்.

14.12.1799-அமெரிக்க முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் நினைவுநாள்.

21.12.1879-ரஷ்ஷிய அதிபர் ஜோசப் ஸ்ரான்லின் பிறந்தநாள்.

24.12.1973-பகுத்தறிவாளர் ஈ வே இராமசாமிப்பெரியார் நினைவுநாள் (17.09.1879-24.12.1973)

24.12.1987-தமிழ்நாடு முதலமைச்சர் நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் நினைவுநாள் (17.01.1917-24.12.1987)

24.12.1524-கடலோடி வஸ்கொடகாமா நினைவுநாள் (1460-1524)

26.12.1893-சீனாவின் சிற்பி சீனப்பிரதமர் மாவோசேதுங் பிறந்தநாள்.

---

**வாசகர்களுக்கு!....**

**அன்புகனிந்த நத்தார் - புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**



# ஆலம் சூடி ஆராதிக்கின்றோம்!...

விதையாகிப்போன வீரர்களே வேங்கைகளே
சிதைமீதில் சத்தியம் சிந்தையில் நீங்களே
கதையாகி விடவில்லை காவல் தெய்வங்களே
புதைகுழிகளில் துயிலும் எம் பொக்கிஷங்களே

பாய் இன்றி உணவின்றி பகலிரவாய் நீரலைந்தீர்
மாய்த்தே உயிரை மண்மீட்க வேட்கைகொண்டீர்
தாய் நாடும் தமிழீழமும் தணியாத தாகமாகி
துய்யவர் நீவீர் துயில்கின்றீர் தாய்மடியில்

மண்விட்டு வந்தநாம் மன்னிப்பு வேண்டுகின்றோம்
மாண்டவரை எண்ணி மனதார வணங்குகிறோம்
கண்ணிழந்து கையிழந்து காலிழந்த உறவுகளை
கைகொடுத்து தாங்கி காணிக்கை செலுத்திடுவோம்.

போர்கண்டு விழுப்புண்கண்டு பூமியில்
அல்லல்பட்டு போராளியெனும் நாமத்தோடு
புழுதியில் வீசப்பட்டோர் சீரான வாழ்வுக்கு
சிரத்தையோடு கைகொடுப்போம் சிதறிய
தமிழர் நாம் சிறுமைதனை துரத்திடுவோம்

புலம்பெயர்ந்து வாழ்வதால் புலம்பி அழவில்லை
நிலம்பார்த்து விம்முகின்றோம் நலிந்த
தேசம் கண்டு நலம்பாடில்லா சமர்பணமாய்
நாடிவந்து கல்லறைக்கு ஆலம் சூட்டி
ஆராதிக்கின்றோம் ஆண்டாண்டு தோறும்!...

(கலைவாணி.ஏகானந்தராஜா-யேர்மனி )



# பாலன்பிறப்பு

(அம்பலவன் புவனேந்திரன்)

வெள்ளம்போல் ஒளிபாய்ச்சி வெளிச்சமெனவே இறங்கியவராம்
வேதனைகளைத் துடைப்பதற்காய் விண்ணிறங்கி வந்தவராம்
துள்ளிவந்த பிள்ளையென இறைத்தூதராய்ப் பிறந்தவராம்
துளிர்க்கும் அன்பு நேசத்தினால் துயர்போக்க அவதரித்தவராம்
உள்ளமெலாம் மகிழ்ச்சிபெருக உய்விக்கவந்த பாலன்பிறப்பை
உலகம் போற்றும் பார்வழியில் உளமார நாமும் துதித்திடுவோம்.!

அள்ளஅள்ளக் குறையாத தூயஅன்பின் வடிவாய் ஆனவராம்
ஆயர்குலக் கண்ணனைப் போலவே அவனியில் அவதரித்தவராம்
எள்ளளவும் இரக்கமற்ற ஏரோதுமன்னனின் இடர்களினால் விலகி
எருசலேம்நகரத்தில் மண்ணில்வந்து எமக்கென அவதரித்தவராம்
துள்ளிவரும் நதியினைப்போல் துயர்களைக் கழுவப் பிறந்தவராம்
தூதரின் பிறப்பை ஏற்றி எம்தூய தமிழால் கொண்டாடிடுவோம்.!

பள்ளத்தில் இருந்தவர்க்காய் பரலோக இராச்சியம் அமைத்தவராம்
பரிசுத்த ஆவியின் பெயரால் பார்போற்ற மேய்ப்பராய் உயர்ந்தவராம்
குள்ளமனதுடையவர்க்காய் மலைக்குன்றுப் பிரசங்கம் செய்தவராம்
குருதிசிந்திப் பாவிகளின் குறைகளை நீக்கிட மண்ணில் பிறந்தவராம்
முள்ளில் முடிசூட்டி வதைத்திட்ட மூர்க்கர்களையும் மன்னித்தவராம்
முதல்வனாய் அவதரித்த அத்தினத்தை முழுமனதாய் ஏற்றிடுவோம்!

மெள்ளமெள்ளத் துயரினைப் போக்கிட மேதினியில் உதித்தவராம்
மேரியன்னை மடியில் தவழ்ந்து மக்களுக்காய் சிலுவை சுமந்தவராம்
வெள்ளைப் பனிப்பொழிவில் புதுவிடிவெள்ளியாய் முளைத்தவராம்
வேதனைகளைப் போக்குதற்காய் வித்தெனவே முளைத்தவராம்
உள்ளத்தில் உதித்தவர்மறை உயர்மறையாய் எமக்கு உதிர்த்தவராம்
உலகத்தார் வணங்கும் பாலன்பிறப்பை உணர்வோடு போற்றிடுவோம்!




## புரட்டாதி - ஐப்பசி (2017) மண் சஞ்சிகை இதழின் அட்டைப்படக் கவிதை.

போற்றும் வகையில்புரிந்தஅறத்தால்
புலர்ந்ததுபுதிதாய் பூமி
ஏற்றியசுடராய் கீற்றினில் ஒளியாய்
மாற்றியவழிகள் நான்கு- சமூக
சேற்றினைக் கழுவிடசெழும்பணிபுரிந்தீர்
செளிந்துச் சிறந்தசீலம்.

நாற்றில் ஒன்றாய் கூற்றின் பொருளாய்
ஆற்றினீர் பணிகள் ஆய்ந்து-பிறர்
தூற்றல் என்றும் தானாய்ப் பறந்திட
துடைத்தீர் தொழுநோய் துயர்
ஆற்றங்கரையில் வீற்றிருந்தகருவின்
நாற்றாய் விழுந்தீர் பூமியில்-மனிதம்
தேற்றுவாரின்றிதேம்பியவேளையில்
தெரிந்தீர் தெளிந்ததுதிசை
காற்றில் கலந்துநேற்றில் உறைந்து
வேற்றாய் மிளிர்ந்தீர் உவந்து-உலகு

**--அம்பலவன் புவனேந்திரன்..**

# போதுமடா சாமி.......

கவி மீனா - யேர்மனி

நாளும் பொழுதும்
நாட்டு வைத்தியத்தை கேட்டு கேட்டு
அலுத்துப் போச்சுது
வைத்தியம் செய்து செய்து
பையித்தியமும் முத்திப் போச்சுது
சுகருக்கு வெந்தயம் நல்லம்
என்பான்
வெண்டிக்காய் நல்லம் என்பான்
அடுத்தவனோ பாவற்காய்தான்
நல்லம் என்பான்
இன்னோருவன் பாவற்காய் மருந்தை
முறிக்கும் என்பான்
சீனி கூடாதாம் பனங்கட்டி
நல்லம் என்பான்
வாங்கிப் பார்த்தால் பனம் கட்டியும்
கலப்படம்தான்!
இரத்தக் கொழுப்பை கரைக்க
உள்ளி நல்லம் என்பான்
அடுத்தவனோ அது வாய்வை
கிளறும் என்பான்
இஞ்சி உண்டால் செமிபாட்டுக்கு
நல்லம் என்பான்
பின் அதுவே சூடு என்பான்
கடுக்காய் மலசிக்கலுக்கு
நல்லம் என்பான்
அதிலும் கடுக்காயில் நஞ்சும்
உண்டு என்பான்
தேசிப் புளி விற்றமின் சீ என்பான்
அது அல்சருக்கு கூடாதும் என்பான்
கீரை வகை விற்றமின்
நிறைந்தது என்பான்
ஆகாது என்பான்
தேனை விட மலையிலும்
மருந்து இல்லை என்பான்
அந்தத் தேனிலும் இப்ப
கலப்படம்தான் என்பான்
தேங்காய்ப்பால், என்ணெய்
கொழுப்பு இல்லை என்பான்
அடுத்தவனோ அதுவே மாரடைப்பை
கொண்டு வரும் என்பான்
மிளகாய் நோக்களை குறைக்கும்
என்பான்
இன்னோருவன் மிளகாய் வயிற்றிலை
அல்சரை உருவாக்கும் என்பான்

போதுமடா சாமி வைத்தியத்தை
கேட்டு
பைத்தியமானதுதான் நானும் சாமி
அரை குறை அறிவோடு மூலைக்கு
மூலை
நாட்டு வைத்தியர் என்று
குழப்புறாங்க குட்டையை!

அளவோடு உண்டு அறிவோடு வாழ
வழி இருந்தால் காணுமுங்க!
விதி வந்தால் எல்லாரும்
போகத்தான் வேணும்
அதற்கிடையில் இஞ்சி தின்ட
குரங்காட்டம்
ஏன் நாம் அல்லல் பட வேணும்?
எதைதான் உண்டாலும் சாவை
தடுக்க
மலையிலும் மருந்து இல்லை
இதுதான் உண்மையுங்க!.....

# காலமும் கோலமும்...

நெடுந்தீவு முகிலன்

அகப்பை காம்பால் மாவு கிளறி
அரிசிப் பேணியால் கொத்தி
ஓலைப்பெட்டியில் அவியும்
அம்மாவின் பிட்டையும்
பழங்கறிச்சட்டியையும் நான்
பதம் பார்த்ததையும்...
அக்காளும் தங்கச்சியும்
மாத்துலைக்கை போட்டு
கை வலித்த போது விரல்களுக்கு
நான் நல்லெண்ணை தடவியதையும்...
ஒல்லித்தேங்காய்களை இணைத்து
வாய்க்காலுக்குள்
நீந்தப்பழகியபோது
காற்சட்டை கழன்றதை
பக்கத்துவீட்டு
பார்வதி பார்த்து
சிரித்ததையையும்...
புத்து இடித்து கறையான்
கொண்டுவந்து
அப்பா வளர்த்த கோழி குஞ்சுகளை
கீரியும் பிராந்தும் சண்டை
பிடித்து திண்றதையும்...
வேப்பம் பூ வடகமும்
காத்தோட்டியம் காய்
சீவலும் - அப்பா
அப்பாவுக்கு பிடிக்கும்
ஆடி அமாவாசை விரதத்தையும் ...
ஓடியல் கூழும் ஒற்றைப்பனை
கள்ளும்
முற்றத்து கொய்யாவின் கீழ்
சுற்றி இருந்து பருகியதையும்...

பாட்டிகளின் ஒப்பாரி
ஊரில் இருந்தே
யமனை ஓடஓட கலைப்பதையும் ...
இப்போதும் நினைக்க இனிக்கிறதே
இதில் ஒன்றையேனும் என்
மகன் அனுபவிப்பானா
இப்போதே என் வீட்டுக்காரி
வெளிநாடு போவோம் என்கிறாள்

# ஒரேநாளில்இருமழை

**மழை 01.**

அடை மழை பெய்கிறது.
கூரைகள் வழியாக ஒழுகும் மழை
நீருக்கு
குழந்தைகள் பாத்திரம்
வைக்கிறார்கள் .
மின்சாரம் தடைப்படுகிறது .
விறகுகள் நனைந்து விட மதிய
உணவும்...
கனவாகி விடுகிறது.
நாய் பூனை கோழிகள் எல்லாம்
நனைந்து
நனைந்து நடு வீட்டிற்குள்
வருகின்றன.
கிணறு நிரம்பி பக்கத்து
வாய்க்காலோடு கலக்கிறது.
சாக்கடை நீர் மணக்கிறது.
பாடசாலை கொப்பி புத்தகங்கள்
பாதுகாப்பிற்காக

வைக்கப்படுகிறது.
கோதுமை மா பையை தலையில்
போட்டுக் கொண்டு...
காயவிடப்பட்ட துணிகள்
எடுக்கப்படுகின்றன.
மரங்கள் முறிவதும்.... தவளைகள்
கத்துவதும்....
கேட்டுக்கேட்டு அலுத்து விடுகிறது.
இரவுப் படுக்கைக்கு பக்கத்து
கோயிலுக்குப் போவதாக..
எல்லோரும் முடிவு எடுக்கிறார்கள்.

**மழை -02**
அடைமழை பெய்கிறது
குளிரென்று கொஞ்சம் ஏசியை
குறைத்துக் கொள்கிறார்கள்.
மின்சார அடுப்பில் அவசர
அவசரமாக...
சூடான கோப்பி தயாரிக்கப்படுகிறது.
குழந்தைகள் காகிதக் கப்பல்களை..
சரி செய்கிறார்கள்.
யன்னல்கள் சாத்தப்பட்டு
தாவாரத்திற்கு...
எதிராய் திரைச் சீலையும்
மாட்டப்படுகிறது.
வாகனங்கள் உள்ளுக்கு எடுத்து
விடப்படுகின்றன.
வானிலை அறிக்கைகள்...
ரீ.வியில் பார்க்கப்படுகிறது
இனிய மழை நாளைப்பற்றி...
உறவுக் காரர்களோடு
"ஸ்கைப்பில்" பேசப்படுகிறது
சாதுவாய்த் தூக்கம் வந்ததும்
கம்பளியைப்
போட்டுக்கொண்டு கதவுகளை
அடித்துச்..சாத்திக் கொள்கிறார்கள்.
வெளியே முத்தங்களினது சத்தம்
மழையின் இரைச்சலைத் தாண்டியும்
கேட்டுக் கொண்டிருந்தது...

## கார்த்திகைதிங்களே...

உரமான திங்களிது
உறவுகளின் திங்களிது
வரமான கார்த்திகை
வணக்கத்திற்குரிய கார்த்திகை
உயிரீந்த உத்தமர்கள்
நினைவோடு தினமும்
வலிசுமக்கும் கணத்தில்
வரண்டுநிற்கும் கண்கள்
வாடிநிற்கும் அகமே
இழந்துபோன இழப்பில்
நரம்புகளும் புடைக்கும்
நாளிலும் தவிக்கும்
நம்பிக்கையே சிதையும்
நாதியற்ற உறவுகட்கு
நாங்கள் காட்டும் வழியேது
நாளைய நிலையேது.

வசந்தா ஜெகதீசன் - ஜேர்மனி

# காலத்தை வென்றவர்கள்!...

கோவில்கள் வாழ தெய்வங்கள்
குலத்தை காத்திட்ட சாமிகள்
கழகத்தித்தினில் நஞ்சினை சூடியே
காவியமாகிய வேங்கைகள்

பாலா பிஷேகம் கண்டதில்லை
பசியுடன் பலநாள் காத்து நின்றார்
பதிலாய் எதையும் கேட்டதில்லை
பலிக்கடாக்களாக கொடுத்திட்டோம்

தவங்கள் இவற்காய்
(நாம்) நோற்றதில்லை
தவமிருந்த கருவறை கதறியள
தியாக வேள்வியில் ஆகுதியாய்
தங்களைத் தந்தே புடமிட்டார்

வித்துடல் விதையாய் தந்திட்டே
விளைநிலம் நிறைந்தே வாழகிறீர்
வீரர்கள் உங்கள் தியாகங்கள்
விருட்ஷமாய் தமிழுடன் செழித்திருக்கும்

கார்த்திகை திங்கள் மலர்ந்திட்டால்
கார்த்திகை மலர்கள் மலர்ந்திருக்கும்
கல்லறை கோவில்கள் அர்ச்சித்தே
கடமையின் நிறைவில் உயர்ந்திருக்கும்

காலத்தைவென்றவர்
நினைவேந்தல் வாரம்
கார்மேகம் தானும் பூத்தூவும்
கருவிழி நிறைந்தே ஆறாகும்
கதறி அழுதே இருள் சூழும்

இதயம் ஏங்கி துடிக்கிறதே
இரு விழி திறந்து பாரீரோ
இனியும் களப்பலி வேண்டாமே
இவர்காய் ஒன்றாய் இணைந்திடுவோம்

கீத்தா பரமானந்தன்
யேர்மனி



# அகதிகளை ஆதரிக்கும் ஆட்சிதேவதை ஏஞ்சலா மெர்கல்

## 4 வது தடவை நாட்டின் தலைவராகின்றார்

ஏஞ்சல் என்றாலே "தேவதை" இவர் அழகு தேவதை என்பதை விட அகதிகளை காக்கும் ஆட்சி தேவதையாக உலகமே போற்றுகிறது. அகதிகளை அரவணைக்கும் அன்பு உள்ளம் கொண்ட ஏஞ்சலா டோராதியா மெர்கல், உலகில் மனிதமும் அமைதியும் ஒரு ஆட்சியில் எழுச்சிபெறுவதற்கு முன்னுதாரணமானவர் என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சமீபத்தில் மனமுவந்து பாராட்டினார்.

இவர் ஒரு சிறந்த அரசியல்வாதி, அதற்கு முன்னால் அறிவியல் ஆராய்ச்சியாளர், 2006 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை ஜெர்மன் அதிபர், கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றிய (CDU) கட்சியின் தலைவராக 2000 ம் ஆண்டு முதலாக இருக்கிறார். தற்போது, 63 வயது நிறைவடைந்திருக்கும் அவர், 1954 ம் ஆண்டில் ஜூலை 17 ல், முன்பு மேற்கு ஜெர்மனியாக இருந்த ஹம்பர்க்கில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் ஹோர்ஸ்ட் காஸ்னர், ஹெர்லிண்ட் காஸ்னர்.

மெர்கல் இயற்பியல் வேதியலில் டாக்டர் பட்டம் பெற்றார். 1998 முதல் ஜோச்சிம் சாயரை திருமணம் செய்துகொண்டு வாழும் இவர். அதற்கு முன் உல்ரிச் மெர்கல் என்பவருடன் (1977 முதல் 1982 வரை) தனது முதல் திருமண வாழ்க்கையை நடத்தினார்.

ஜெர்மனில் 1989 ல் நடந்த புரட்சிகளை அடுத்து, ஜனநாயக முறையில் 1990 ல் தேர்ந்தெடுக்கப்பட்ட கிழக்கு ஜெர்மன் அரசில் துணை செய்தி தொடர்பாளராக தனது

அரசியல் வாழ்வை தொடங்கினார். பிறகு, அதிபர் ஹெல்முட் கோல் ஆட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். சுற்றுச்சூழல் அமைச்சராகவும் 1994 ல் மாற்றப்பட்டார். 1998 ல் கோல் தோற்ற பிறகு, சி.டி.யூ. வின் பொதுச்செயலாளராக முதல் பெண்ணாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலிருந்தே அவர் வாழ்க்கை உச்சம் பெற்றது. 2005 ல் நடந்த கூட்டாட்சி தேர்தலில் வெற்றிபெற்று பெரும் கூட்டணி முனையிலும் முதல் பெண் ஜெர்மன் அதிபராக நவம்பர் 22 ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2007 ல் ஐரோப்பிய கவுன்சில் மற்றும் G8 அமைப்புக்கு இரண்டாவது பெண் தலைவராக இருந்து, லிஸ்பன் உடன்படிக்கை மற்றும் பெர்லின் பிரகடன பேச்சில் மத்திய பங்கு வகித்தார். அதே ஆண்டின் ஏப்ரல் 30 ல் அட்லாண்டிக் பொருளாதார கவுன்சில் ஒப்பந்தம் மெர்கலை மையப்படுத்தியே கையெழுத்திடப்பட்டது. அது ஐரோப்பிய மற்றும் சர்வதேச அளவில் நிதிநெருக்கடியை நிர்வகித்தது. தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்குவது. வாரத்தில் பணி நேரத்தை அதிகப்படுத்தும் காரணங்களுக்கு எதிரான மாற்றங்களை கொண்டுவந்தார். . மேலும், நிறுவனங்களின் வணிகம் குறைவானால் தொழிலாளர்களின் செலவுகளை எளிதாக கட்டுப்படுத்த முடியாது. ஏற்கனவே உள்ள சட்டங்கள் நாட்டில் போட்டிநிலை குறைவதற்கு சாதகமாகவே உள்ளதை அறிவுறுத்தினார். ஜெர்மனில் பல சமூக கலாச்சார உருவாக்கம் பற்றி, போட்ஸ்டாமில் நடந்த அடிப்படைவாத கறிஸ்தவ ஜனநாயக ஒன்றியத்தின் இளைஞர்கள் கூட்டத்தில் அக்டோபர் 2010 ல் பேசினார்.

உலகின் இரண்டாவது சக்தி வாய்ந்த நபராக ஃபோர்ப்ஸ் பத்திரிகையில் (2012 முதல் 2015 வரை) தேர்வு செய்யப்பட்டார். உலகின் மிகச்சிறந்த மனிதராக 2015 டிசம்பரில் "டைம்" பத்திரிகையிலும் தேர்வுசெய்யப்பட்டார்..

ஃபோர்ப்ஸ் பத்திரிகை 9 வது முறையாக உலகின் சக்திவாய்ந்த பெண்ணாக மே 2015 ல் தேர்வுசெய்தது. "அரசியலுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு பணம் சேர்ப்பது முதன்மையான நோக்கமாக இருக்கவேகூடாது."இது அவரது செறிவான சிந்தனை. ஹிட்லர் ஆட்சியில் மனிதத்தில் ஜெர்மன் எவ்வளவு தாழ்ந்ததோ, நேர்மாறாக,மெர்கல் ஆட்சியில் அதே ஜெர்மன் நிற்கிறது.

# பிள்ளைகளால் தலைக்குனிவு..........

கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி

தாயகத்தில் பிறந்து வளர்ந்து மண்ணின் வாசனையுடன் பண்பையும் பருகியவர்கள். உறவுகளைப்பேணி, வாழ்ந்தவர்கள். சுற்றம்சூழ முற்றம் நிறைந்து நம் சொந்தம், மண். இவ்வளவு பாசம் பற்று நிறைந்தவர்கள் தமிழர். இன்று புலம் பெயர்ந்து புலத்தின் வாசனைக்குள் புகுந்துவிட்டோம். அதிலிருந்து மீளமுடியாது திணறுகின்றோம். அத்தோடு இங்கு பிறந்த நம்பிள்ளைகள் வாழும் முறைவேறு. இருசமுகம் கலந்து வாழ்க்கை. இருசமுகவாழ்வில் இருசங்கடங்கள். ஒன்றுசொந்த பந்தம் மற்றது தனது குடும்பம் மட்டும் என்றதோரணை.

கூடுதலாகப் பிள்ளைகள் தாம் தம் குடும்பம் என்றிருக்கப் பெற்றாரோ சொந்தம், பந்தம், உறவுகள் என்று அங்கலாய்க்க. இங்கே பிள்ளைகளின் வாதமே வெல்லும். இதனால் பெற்றார் உறவுகள் இடைவெளிகாணும். இங்கு பெற்றார் மனம் ஒடிந்துபோவார்கள். காரணம் பிள்ளைகளா? உறவுகளா? எனக் கடைசியில் வெல்வது பிள்ளைகளே ! பிள்ளைகளின் சிறுபிள்ளைத் தனத்தால் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாமல் தவிக்கும் பெற்றார். உற்றாரின் வெறுப்புக்கு ஆளாகி வேற்றுமைக்கு உள்ளாகின்றனர். ஆனால் அவர்கள் தாம் பிள்ளை பிறந்து வளர்ந்த பாசங்கள், அன்பு அனைத்தும் இழந்து மனதில் வேகிவெந்து விடுகின்றனர். ஆனால் இங்கு உள்ள பிள்ளைகளோ, அதனுடைய பெறுமதியை நினைப்பதில்லை. அல்லது ஒரு தூசாக நினைத்து விடுகின்றனர். இதுயாருடைய குற்றம். ஆகபெற்றாரும் சிறுவயதிலிருந்தே சொந்தங்களை சொல்லிச் சொல்லி வளர்க்கவேண்டும்.

அவர்கள் பிழைசெய்தால் பிள்ளைகள் முன்கூறாது, அவர்கள் செய்யும் நன்மையைச் சுட்டிக்காட்டி வளர்க்கவேண்டும். அப்போதுதான் குறை அவர்களுக்கும் தம் உறவுகள் மீது அன்பு வரும். அதைவிடுத்து சொந்தங்களில் குறை கண்டுபிடித்து அதையே குறைசொல்லிக் கொண்டிருந்தால், அவர்களுக்கும் அலுப்பு அடிக்க

அடிக்க அம்மி நகர்வது போல மனமும் மாசுபட்டு வெறுப்புவந்து அவர்களும் குறைசொல்வார்கள்.இப்போது பெற்றார் அதைமறந்து சொந்தம் கொண்டாட வெளிக்கிடபிள்ளைகள் விடமாட்டார்கள் காரணம் பல கூற அவர்களை ஒட்டவிடாது தடுப்பார். இந்நிலையில் பெற்றார் உணரத்தொடங்குவர். ஆனால் அதுகஷ்டமாக இருக்கும். பிழைசெய்துவிட்டோமா? அல்லது பிள்ளைகளைச் சொல்லிவளர்க்க வில்லையா என்று தடுமாற்றம்.

இதனால் உறவினர் முன் தலைகுனிந்து நிற்கும்நிலை. இதுயாரால் வந்தது எப்படி ஏன் என்பதை யோசித்து நடக்கவேண்டும். விளையாட்டாகிவிட்டது வினையில் வந்து முடியுமாப்போல் சிறுபிள்ளையின் சிறு பிழைதானே வளர்ந்து மரமாகிவிட்டதே. இனி பிரயோசனமில்லை தலைக்குனிவு பிள்ளைகளால் என்பதை ஒப்புக் கொள்ளத்தான்வேண்டும். ஆகபிள்ளைகள் மற்றவர்களை குறைகூறும்போது அதைத்திருத்தி அவர்கள் செய்த நன்மைகளை நினைவுப்படுத்தி அவர்களை வளர்க்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களும் சொந்த பந்தத்திற்குள் அணைத்து நடப்பர். அதனால் இனியாவது அவர்களால் தலைகுனிவு இல்லாமல் நடக்க முயற்சி செய்யுங்கள்.......

---

# இலங்கைச் சிறார்களின் இன்றைய நிலை

இலங்கையில் 15 சதவீதமான பிள்ளைகள் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் அதே போல் எமது நாட்டில் 15 சதவீதமான பிள்ளைகள் நீரிழிவு நோய்க்கு ஆளாகியிருக்கின்றார்கள். அத்துடன் இலங்கையில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். 14 சதவீதமான பிள்ளைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எடுப்பதற்கு முன்னரே பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றார்கள். 13 தொடக்கம் 15 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளில் 11சத வீதமான பிள்ளைகள் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கின்றார்கள். இவை சிறுவர்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு, சிறுவர் செயலகம் மற்றும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால தகவல்களாகும்.

# தாலியும் வேலியும்....

கவி மீனா-மோர்மனி



அந்தக் தாலியை காணும்போது மற்ற இடவர்களும் அந்தப் பெண்ணுக்கு மதிப்பைக் கொடுத்து விலகி நிற்பது வழக்கமாகி விட்டிருந்தது எல்லாம் அன்றைய காலம், அந்தக் தாலியை ஒரு பெண் மதிக்கக் காரணமான அந்தக் தாலியைக் கட்டிய கணவன் அந்தப் பெண்ணுக்கு உண்மையானவனாக, அன்பானவனாக, ஆதரவுக் கரம் கொடுத்து தன் உயிராக நினைத்து வாழ்ந்தால்தான் அந்தக் தாலிக்கும் பெருமை அந்தக் தாலியை கழுத்தில் போடுகின்ற பெண்ணுக்கும் பெருமை.

தாலி என்பது தமிழ் பெண்ணுக்கு ஒரு வேலி போலே பாதுகாப்பு தரும் என்பதுதான் அன்றைய நம்பிக்கை தாலி கட்டாமல் ஒரு ஆணும் பெண்ணும் தனித்துச் சந்திக்க முடியாத ஒரு காலம் ஊரிலை இருந்தது. அந்த வழக்கத்துக்கு அடிமையான பெண்கள் தாலி கழுத்தில் ஏறுவதை ஒரு பெரும் பேறாகத்தான் கருதினார்கள். பெண்ணை பெற்றவர்களும் தம் மகளின் கழுத்தில் தாலி ஏறும் வரை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் வாழுகிறார்கள்..

தாலி கட்டி முடிந்தால்தான் பெண்ணின் கடமையைச் சரி வரச் செய்து விட்டதாகத் திருப்தி அடைந்த காலம் இருந்தது. இன்று புலம் பெயர்வாழ்விலும் ஊரிலும் எப்படியோ எனக்குத் தெரியலை ஒருக்காவா தாலி கழுத்திலை ஏறுது? ஒன்றை கழட்டி மறு தாலி மாறி மாறி ஏறுகின்ற காலமாகிப் போய்விட்டுது. அதைப் பற்றி நான் இன்று சொல்ல வரவில்லை . அன்று தாலி கட்டும் போது மணப்பெண்ணுக்கு மெய் சிலிர்பதும் பெற்றவர் கண்களில் நீர் கசிவதும் எல்லாம் ஒரு பெரிய காரியம் ஒப்பேறிய மன திருப்தியானே?

அந்தக் தாலியை காணும் போது மற்ற ஆடவர்களும் அந்தப் பெண்ணுக்கு மதிப்பைக் கொடுத்து விலகி நிற்பது வழக்கமாகி விட்டிருந்தது எல்லாம் அன்றைய காலம், அந்தக் தாலியை ஒரு பெண் மதிக்கக் காரணமான அந்தக் தாலியைக் கட்டிய கணவன் அந்தப் பெண்ணுக்கு உண்மையானவனாக, அன்பானவனாக, ஆதரவுக் கரம் கொடுத்து தன் உயிராக நினைத்து வாழ்ந்தால்தான் அந்தக் தாலிக்கும் பெருமை அந்தக் தாலியைக் கழுத்தில் போடுகின்ற பெண்ணுக்கும் பெருமை.

ஒரு தாலியைச் சுமந்து கொண்டு மனதிலை கணவனின் மேல் அன்பு இல்லாமல் இருந்தால் அந்தக் தாலிக்கு என்ன மதிப்பு? தாலியைக் கட்டிய கணவன் வேறு பெண்களோடு தன் பொழுதை போக்கிட்டு இருந்தால் அவன் கட்டிய தாலியை போடுவதால் பெருமையும் இல்லை, கட்டியவனின் ஆதரவும் அன்பும் கிடைக்காத போதும் அந்தக் தாலியைக் கழுத்தில் போட்டு இருக்கு எத்தனை பவுணிலை தாலி போட்டிருக்கிறோம் என்று சொல்வதுதான் இன்றை காலத்தில் அனேக பெண்கள் மத்தியில் உள்ள வழக்கமாகி விட்டது. தாலியின் பெருமையும், தாலி கட்டியவன்மேல் உள்ள பாசமும் அந்தக் தாலியை கட்டிய கணவன் மனைவியை நேசிக்கும் வாழ்க்கை முறையோடே கலந்து பின்னிப் பிணைந்து இருக்கின்றது. ஆரம்பத்தில் தாலி கட்டிய கணவன் போடுகின்ற தடைகள், சட்டங்கள் எல்லாம் பிடிக்குற மாதிரி இருக்கும், காலப் போக்கில் அவனது அதிகாரம் ஒரு பெண்ணை அடிமை நிலைக்குத் தள்ளுமாகில் அந்தக் தாலியே கழுத்தை மெல்ல மெல்ல இறுக்கும் தூக்குக் கயிறாகத்தான் மாறுகின்றது.

தாலிக்கும் வேலிக்கும் பெருமை பாதுகாப்பை தருவதே ஒழிய அடிமைகளை சிறையில் அடைப்பது போலே அடைத்து வைக்க அல்ல, ஆசையோடு கழுத்தில் போடும் தாலி ஒரு அழகு சாதன பொருள் என்று நினைக்கும் பெண்களும் உண்டு, தாலி என்பது ஒரு பெண்ணுக்கு பாதுகாப்பும், பெருமையையும் கொடுக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு பெண்ணை பெற்றவர்களும் அன்று விரும்பியதும் தமிழ் பெண்கள் வேண்டுவதும் அதுவே

அந்தக் தாலிக்கு மதிப்பை தருவதும், அதை அணியும் பெண்ணுக்கு பாதுகாப்பும் பெருமையும் கிடைக்க கூடியதாக வாழ்ந்து காட்ட வேண்டியது பெண்ணல்ல, அதை அந்தப் பெண்ணின்

கழத்தில் கட்டிய ஆண்மகனும் என்பதே தான் நான் இன்று இங்கு சொல்ல வந்த விடயமாகும்.
ஏதோ ஒரு அழகான பெண்ணை பிடித்துத் தாலியை கட்டி விட்டால் அவள் விட்டுப் போட்டு ஓடிப் போகமாட்டாள் தன் காலடியில் அடிமையாக கிடந்து, வீட்டு வேலைகளைச் செய்து, பிள்ளைகளை பெத்துக் கொண்டு சொன்னதை கேட்டு வாயை மூடி மௌனியாகக் கிடக்கட்டும் என்று நினைக்கும் ஆண்களும் தாலி கட்டியாச்சு எனி என்ன செய்ய போகினம்? என்ற நினைப்புத்தான்.
பெண் ஒரு அடிமை என நினைத்துத் தன் பாட்டிலை திரிகிறா இல்லையேல் கட்டியவன் மரணத்துக்குப் பிறகுதான் இறங்குகிற தாலி ஆண்களின் திமிரான போக்காலும் புரிந்துணர்வில்லாத குடும்ப வாழ்க்கையாலுமே..ஒற்றுமையான வாழ்வும் இல்லாமல் போவதால் மரணங்கள் காணும் முன்பே மணமுறிவு வருகிறது, தாலிக்கும் மதிப்பு இல்லை அது தந்த மணவாழ்வுக்கும் பெருமை இல்லை. மரணத்தின் முன்பே தாலி கழுத்தை விட்டு இறங்கும் காலம் மணவாழ்வுக்கு மரணம்
மண வாழ்வுக்கே மரணம்!......

---

# தொழில் தேடி மத்திய கிழக்கிற்கு 37 ஆயிரம் பெண்கள் செல்கை....

2017 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 37,002 பெண்கள் தொழில் வாய்ப்புக்களைத் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை, 141,725 இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.
கடந்த 2015 ஆம் ஆண்டில், 73,226 பெண்களும், 2016 ஆம் ஆண்டில் 65,023 பெண்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அந்த வகையில், 2017 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 37,002 பெண்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் தொகை குறைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 3 | 8 | 5 | 4 | 6 | 9 | 1 |
| 1 | 8 | 5 | 7 | 6 | 9 | 2 | 4 | 3 |
| 4 | 6 | 9 | 2 | 1 | 3 | 7 | 5 | 8 |
| 8 | 3 | 6 | 5 | 9 | 1 | 4 | 2 | 7 |
| 9 | 1 | 7 | 6 | 4 | 2 | 3 | 8 | 5 |
| 5 | 2 | 4 | 3 | 8 | 7 | 1 | 6 | 9 |
| 7 | 4 | 2 | 9 | 3 | 5 | 8 | 1 | 6 |
| 3 | 9 | 8 | 1 | 2 | 6 | 5 | 7 | 4 |
| 6 | 5 | 1 | 4 | 7 | 8 | 9 | 3 | 2 |

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| த்<br>தை | து<br>ந் | ரை<br>ஆ | வி<br>டை |
| க | ப | டி | ஆ |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | ன் | டெ | ளா | ல் | அ | ம் |
| ன் | பா | ல | ம் | ள | க | ட |
| ளா | இ | ல் | ளா | ள் | தி | ட் |
| ர் | வ | ளு | ள் | வ | ரு | தி |
| ர | ஆ | மை | ன் | ன் | ப் | ர |
| வீ | ணை | ரு | க | ளி | ப | வ |
| மா | மா | ள | ம | த | தி | ம் |

# இப்படியும் நடக்குது இங்க....

-மதவடி மயிலோர்-



என்ன...எல்லாரும் சுக நலம்தானே.. நானும் சுகம்தான்...என்ன இந்த மயிலன் எல்லாரிடமும் சுகம் விசாரிக்கிறான் என்று யோசிக்காதையுங்கோ...சும்மா ஒரு பழக்கத்திற்குத்தான் எல்லோரிடமும் சுக நலம் விசாரிப்பது இயல்புதானே கண்டியளே..அதுவும் தமிழர் என்றால் ஒரு அன்புதானே.. சரி...சரி..எல்லாரும் கோடைகால விடுமுறையை முடித்து இப்ப பழையபடி வேலை..வேலை என ஓட ஆரம்பித்திருப்பீர்கள் என்று இந்த மயிலன் எண்ணுகிறான். உண்மைதானே. ஓடி..ஓடி உழைத்தால்தானே வீடு வேண்டினவே வீட்டுக்காசு, வாடைக்காசு, கார்க்காசு, கரண்ட்காசு அது இது எனக் கட்டிமுடிய கொஞ்சம் மிச்சம் பிடித்துத்தானே சீட்டும் கட்ட வேண்டும். சுற்றுலாவிற்குப் போக வேண்டும். இவற்றைவிடப் பெரிய அநியாயம் ஊரிலுள்ள உறவுகளுக்கு சீதனம் என்று பகல் கொள்ளை அடிப்பவர்களுக்குப் பணத்தை அள்ளிக் கொட்டிக் குவிக்க வேண்டும். இந்தச் சீதனக் கொடுமையும் சாதி மதக் கொடுமையும் தமிழர் மத்தியில் எப்ப அழிந்து ஒழிந்து போகிறதோ அப்பதான் தமிழருக்கு விடுதலை... சத்தியமாக இது உண்மை பாருங்கோ..

சரி...சரி...மயிலன் ஏதோ ஒரு விசயத்தைச் சொல்ல வெளிக்கிட்டு வேற விசயத்துக்க வந்திட்டான் என்று எண்ணிவிடாதையுங்கோ.. வாழ்க்கையில் எல்லாம் ஒண்டறக் கலந்ததுதானே. இப்ப "விசுவாசம்" என்ற விடையத்தைத்தான் உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகிறேன். விருப்பமுள்ளவர்கள் தொடர்ந்து படியுங்கோ..பெற்ற பிள்ளைகள் பெற்றவர்கள் மீது விசுவாசமாக இருப்பது கடவுளைக் கும்பிட்ட மாதிரித்தான்.

அதேபோல் தாய் தந்தை, பிள்ளைகள், குடும்ப உறவுகள், நட்புக்கள் என யாராய் இருந்தாலும் விசுவாசமாக இருந்தால்தானே நல்லது பாருங்கோ.

எமக்குக் கல்வி புகட்டிய ஆசான்களிலிருந்து நமது தொழில், வியாபாரம், நட்பு உறவு என அனைத்திலும் ஓரளவாவது நம்பிக்கை வைக்கவேண்டும். அப்படி என்றால்தான் இந்த உலகமும் உருளும் வாழ்க்கையிலும் சந்தோசமாக வாழலாம். இல்லை எதற்கெடுத்தாலும் நம்பிக்கையீனம், விசுவாசமில்லாமல் வாழ்ந்தால் இறுதியில் நட்டமும் இழப்பும்தான் மிஞ்சும் பாருங்கோ... ஏன் எங்கட விடுதலைப் போராட்டத்தையும் பாருங்கோவன்.. எல்லா இயக்கங்களும் விசுவாசமில்லாமலும் நம்பிக்கை இல்லாமலும் போராடி ஒருவரை ஒருவர் முட்டிமோதி இறுதியில் அழிந்து ஒழிந்து போய் இன்று தொடங்கிய இடத்திலேயே வந்து நிக்கிறோம். நாட்டில் மாறி மாறி வந்த அரசுகளும் ஏதோ விசுவாசமாகவே நடந்தவையே!.. அவையளும் தங்களுடைய சுயநலத்திற்காக தங்களுடைய இலாபங்களுக்காக விசுவாசமில்லாமல் செயற்பட்டு இறுதியில் பல்லாயிரம் மக்களைக் கொன்றொழித்ததுதான் சாதனையாக பதிவுசெய்யப்பட்டுவிட்டது.

சரி..சரி...புலம்பெயர் நாட்டில் ஒரு சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள இந்த மயிலன் ஆசைப்படுகிறான். படித்துப் பாருங்கோவன். வெளிநாடுகளிலுள்ள வெளிநாட்டவர்களில் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நன்மதிப்பு உண்டுதான். வேலையில் அக்கறை, நேரந்தவறாமல் வேலைக்குப் போதல், வேலையை விசுவாசமாகச் செய்தல், வருத்தம் என லீவு எடுக்காமை, நன்றாக வேலை செய்வது அதுவும் விசுவாசமாக முதலாளிக்கோ கம்பனிக்கோ இலாபம் பெருகக்கூடிய வகையில் உழைப்பார்கள். அப்படிக் கடும் உழைப்பாளிகள்தான் தமிழர் சந்தோசம்தான். இதில ஒருசில நம்மவர்கள் தமது சம்பள உயர்வு, பதவி உயர்வுக்காக மற்றவர்களைக் காட்டிக் கொடுத்து சுய இலாபம் பெறுவதிலும் கில்லாடிகள்தான் பாருங்கோ...

இப்படித்தான் வெளிநாடு ஒன்றில் ஒரு இலங்கைத் தமிழன் கம்பனி முதலாளியோடு ஒட்டி உறவாடி, சேவகம் செய்துவந்தான் போதாக்குறைக்கு முதலாளியை தன் வீட்டுக்கு அழைத்து தோசை, அப்பம், வடை சுட்டுக் கொடுத்து

இதுதான் ஆசியாச்சாப்பாடு என்று பெருமை பேசிக் கொண்டான். இனிப்பையும் உறைப்பையும் ருசித்து ரசித்த முதலாளி நாளடைவில் அவருக்குச் சம்பளத்தையும் கூட்டிக் கொடுத்தது ஆச்சரியம் இல்லைப் பாருங்கோ... முதலாளியோடு ஒட்டி உறவாடி, சேவகம் செய்து பழக்கப்பட்டுப் பல வருடங்கள்.. காலை 7 மணிக்குத்தான் வேலை என்றால் அவர் பாருங்கோ 6 - 6 மணிக்கேபோய் வேலையைத் தொடங்கிவிடுவார். ஏனைய தொழிலாளிகள் பேசியோ நக்கல் நளினம் செய்தாலும் இவர் எதையும் பொருட்படுத்துவதே கிடையாது அந்தளவுக்கு விசுவாசம்தான். ஒரு நாள் காலை 6 மணிக்கே தனி ஒருவராக வேலையை ஆரம்பித்துவிட்டார். மற்றவர்கள் 7 மணி என்றால் 7 மணிக்குத்தான் வருவார்கள் இது தெரிந்த விடையம்தானே..

இந்தாள் பணத்தின் மீது அவ்வளவு குறிதான் வேறென்ன..ஒருநாள் காலை 6 மணிக்கே வந்து வேலையைச் செய்துகொண்டிருக்கும் போது தொழிற்சாலையில் அவர் ஓட்டிய இயந்திரம் விபத்துக்குள்ளாகி அதற்குள் அகப்பட்டு நெரிசல்பட்டு துளறவும் முடியாமல் அலறிக்கத்தவும் முடியாமல் 2 மணித்தியாலங்களாக நெரியுண்டு கிடந்திருக்கிறார். 7 மணிக்கு வந்த மற்றைய தொழிலாளிகள் இந்த விசுவாசியைத் தேடியபோதுதான் பருபாவி மெசினுக்குள் அகப்பட்டு நெரிஞ்சுபோய் குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டுகொண்டு அவரை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிய போது இடை நடுவிலே அவர் உயிர பிரிந்தது. எல்லாத் தொழிலாளர்களும் திட்டித்தீர்த்தார்கள் ..அனுதாபம் சொல்லவே விருப்பமில்லாமல் நின்றனர்.

பொலிசு விசாரணை என நடந்து முடிந்தது. எல்லாத் தொழிலாளர்களும் இறந்தவனுக்கு பெருந்தொகை நட்டஈடு கிடைக்கும் எனப் பேசிக்கொண்டனர். இறுதியில் என்ன நடந்தது என்று பாருங்கோவன். அந்த நாதாரி முதலாளி செய்த வேலையைப் பாருங்கோ.. அவருக்கு 7 மணிக்குத்தான் வேலை.. ஆனால் அவர் 6 மணிக்கு வந்து கம்பனிப் பொருட்களை வெளியில் கொண்டுபோய் விற்கக் களவாடியிருக்கிறார். அப்போதுதான் அவர் விபத்துக்குள்ளாகியிருக்கிறார். அவருக்கு 7 மணிக்குத்தான் வேலை. 6 மணிக்கு வேலைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. எனக் கூட்டிக் கழித்து கணக்கைச் சொல்ல பொலிசும் சட்டமும் ஏற்றுக்கொண்டுவிட்டன. இவன் தரப்பில் வழக்காடியும் பலன்

இல்லை. இறுதியில் அவனது மனைவி பிள்ளைகள் நடு றோட்டுக்கு வந்ததுதான் மிச்சம் பாருங்கோவன்!...

இந்த நாதாரி முதலாளியைப் போல் எத்தனையோ முதலாளிகள் இதில் தமிழ் முதலாளிகளும் அடங்குவர். ஏனென்றால் விசா இல்லாமல் அலையும் நம்மினத்தவர்களை குறைந்த கூலிகொடுத்து கூடிய நேர வேலை வேண்டிப் பணத்தைக் கொள்ளையடிக்கும் எங்கட கும்பல்களுக்கு வெளிநாடுகளில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்புக்களும் நடக்குது பாருங்கோ...

இறந்தவரைப் போல எத்தனையோபேர் வெளிநாடுகளில் விசுவாசம் என்ற பெயரில் இரவு பகல் என குளிர் பனி என அலைந்து அடித்துக் கொடுத்துவிட்டு இறுதியில் வெறுங் கையோடு நடு றோட்டில நிற்கும் சம்பவங்கள் ஏராளம் இங்க நடக்குது பாருங்கோ!.. பணம்...பணம்...என்ற அவாவில் வெளிநாடுகளில் எத்தனையோ கூத்துகள் அநியாயங்கள் தினம் தினம் அரங்கேறிக்கெண்டுதான் இருக்கின்றன.

விசுவாசம் என்ற பெயரில் முதலாளிக்கு மற்றைய தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து, பந்தம் பிடித்து சுய இலாபத்தோடு வாழ்ந்ததால்தான் இவர் உயிர் அநியாயமாகப் பொயிருக்கிறது என்பதுதான் உண்மையாகும். பணம் வாழ்க்கைக்குத் தேவைதான் பாருங்கோ...அதற்காக இப்படியாகத் தேவையில்லாத வேலைகள் செய்து உயிர் துறக்கவேண்டுமா!..

இன்று அவரது மனைவி, பிள்ளைகளின் எதிர்காலம்?.....இந்த விடையத்தை கொஞ்சப் பேராவது அறிந்துகொண்டு சிந்தித்து நடந்தால் இந்த மயிலனுக்குச் சந்தோசம்தான். சரி...சரி...புது வருடமும் வருகிறது... தைப்பொங்கலும் வரப்போது... எல்லாரும் சந்தோசமாக வாழ்ந்தால் இந்த மயிலனுக்கும் சந்தோசம்தான்.. அடுத்தமுறை இன்னொரு விசயத்தோட நான் உங்களைச் சந்திக்கிறேன்!..அப்ப நான் வரட்டே!...

-------------

•

# பசுமைவளத்திட்டம்
## The Evergreen Project




யேர்மனி-பிறீமன் நகரைத் தலைமை அமைப்பாகக் கொண்டு இயங்கிவரும் பசுமை வளத்திட்டத்தின் 10வது ஆண்டுவிழா கடந்த 01.10.2017 அன்று யாழ்-சங்கானையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. வருடாவருடம் நடைபெற்ற விழாக்களில் இந்த அமைப்பின் நிதிப் பங்களிப்பால் ஆயிரக்கணக்கான சிறுவர்களும் முதியோர்களும் பயன்பெற்றனர் என்பது சிறப்பான விடையமாகும்.

வருடாவருடம் நடைபெபற்றதைவிட இந்த ஆண்டு10வது வருடமாகையால் இன்னும் வெகுசிறப்பாக நடைபெற்று முடிந்தது. சங்கானை தேவாலய வீதி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் 01.10.2017 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலைவிழாவில் 26 முதியோர்களுக்கு மொத்தம் 60.000-00 ரூபாவழங்கிக் கௌரவிக்கப்பட்டது சிறப்பான விடையமாகும். யேர்மனி-பிறீமன் நகரில் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த விழா வருடாவருடம் நடைபெற்று வருவது வழக்கமாகும்.

இவ்விழாவிற்கு சங்கானை அமெரிக்கன் மிசன் தமிழ்கலவன் பாடசாலையின் அதிபர் அவர்கள் தலைமை வகித்தார். இந்தப் பாடசாலைச் சூழலிலுள்ள 3 முன்பள்ளிச் சிறார்களுக்கு கேக், பால், சிற்றுண்டி, இனிப்புவகை, குளிர்பானம் எனவும் கொப்பி, பென்சில் உபகரணங்களும் வழங்கப்பட்டன. அச்சிறுவர்களால் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுச் சபையோர் மகிழ்விக்கப்பட்டனர்.

ம் வட்டார மாணவர்களின் பெற்றோர்களுக்கு வழமையாக வழங்கப்படுவது போல இம்முறையும் பயன்தரும் பழக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. குறிப்பாக 26 முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 2.000-00 ரூபாபடி 60.000-00ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சங்கானையை வசிப்பிடமாகக் கொண்டவரான காலம்சென்ற சட்டத்தரணி சோ.சிவஞானம் அவரது துணைவியார் காலம் சென்ற தேவி சிவஞானம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தவர்களின் அன்பளிப்பாக இந்த நிதி உதவி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடையமாகும். லண்டன் யேர்மனியிலுள்ள அவர்களது குடும்பத்தின் பிரதிநிதியான திரு சோம சிவ குலநாயகம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டத்தைப் போல் புலம் பெயர் தமிழர்கள் கிராமம் கிராமமாக இப்படிப்பட்ட திட்டங்களை முன்னெடுத்தால் நமது மக்களின் துயர் போக்கலாம் என நம்பலாம்.

இன்றைய உலகம் இரசாயன அணு உலகமாக மாறிவருகின்றது. இதனால் பூமியின் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருகின்றது. நாம் எங்கு வாழ்ந்தாலும் இந்தப் பூமியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டுதானே. இல்லையேல் உயிர் அழிவுகள்தான் ஏற்படும். என்பதை நாம் எல்லோரும் நினைவு கொள்ள வேண்டும். ஆகவே நாம் வாழும் இடங்களில் மரக்கன்றுகள் பழக்கன்றுகள் நிழல் மரங்களை நட்டு வளர்த்துப் பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகத்தான் தாயகத்தில் இந்தப் பணியை மேற்கொண்டு வருகிறோம். முடியுமானவர்கள் நிதி உதவிகள், ஆலோசனைகளை வழங்கலாம். கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்..

-நன்றி-

சோம சிவ குலநாயகம்
நிறுவனர், நிறைவேற்று உத்தியோகத்தர்
பசுமைவனத்திட்டம்.ஜேர்மனி
Tel-49 421 53 10 24

# பழகிப்பார்..... இருக்கிறது....... இன்னொன்று!...........

கௌசி - யேர்மனி

"காலடிக்கும் கன்னாக்காரி நானிருக்கன்னு Don'tworry. உனக்கெதுக்கு அச்சம் அச்சம். ஆசைக்க allow பண்ணு. அச்சங்கள deleat பண்ணு. போய் வரலாம் உச்சம் உச்சம்." "இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு, இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு. என்ன இது கொஞ்சமும் உசார் இல்லாம இருக்கு" சகுந்தலா வாகனத்துள் இருந்தவளாய். முன் இருக்கையில் அமர்ந்து இருக்கும் மகளிடம் பாட்டை சத்தமாய்ப் போடும்படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"பொறுங்கஅம்மா. உங்கள் உசாருக்கெல்லாம் பாட்டுப் போடமுடியாது. நவிக்கேசனின் சத்தமும் கேட்குதில்ல. எங்க கொண்டு எங்கள கொல்லப் போறீங்களோதெரியாது" மகள் வசந்தி தனது காதலன் சபேஷ 'ன் அருகில் இருந்தபடி தாயை அதட்டினாள்."பேசாம இரும் சகு. சத்தம் கூட்டினால் நவிகேசன் சத்தம் சரியாக் கேட்காது"ருத்ராவின் வார்த்தைகளைக் கேட்டு "இல்ல ருத்ரா. பாட்டு உசாரா இருந்தாத்தான் பிரயாணக் களைப்புத் தெரியாது" "ஏன் நான் பக்கத்தில் இல்லையா? ருத்ரா சகுந்தலாவைக் கட்டிஅணைத்தான்.

முன் இருக்கையில் மகள் வசந்தியும் அவள் காதலன் சபேசும் இருக்க, பின் இருக்கையில் சகுந்தலாவும் அவள் காதலன் ருத்ராவும் இருந்தபடி வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். "வீட்டில் அப்பா என்ன செய்றாரோ தெரியாது. ஒருக்கா டெலிபோன் எடுத்துப் பாருங்கோஅம்மா" "சும்மா இருக்கமாட்டா...... தொடங்கிட்டியா...... கொஞ்சம் நிம்மதியா இருக்கலாம் என்றுதான் வந்தனான். திரும்பவும் அந்தமனிசன நினைவுபடுத்திறாய்.

அவர் ஒன்றும் செத்துக் கித்துப் போகமாட்டார். அந்த ஹார்ட் பேசன்ட்டோட என்னகிடந்தது சாகச் சொல்லாத" "ஏன் அம்மா உங்களுக்குக் ஹார்ட் இல்லையா? உங்களுக்குவருத்தம் வராதா? இப்ப என்ன செய்யச் சொல்றாய். எனக்கும் வர வேணும் என்று விரும்புறியா? அந்தவருத்தக்காரனோட வீட்டிலேயே கிடக்கவேண்டும் என்றியா? ஆத்திரத்தில் கத்தினாள் சகுந்தலா.

“cool.... cool சகுந்தலா...என்றபடி அவளைச் சாந்தப் படுத்தினான் ருத்ரா.
பேரின்பம் அன்பாகவும் சிறப்பாகவும் மனைவி மகளுடன் வாழ்ந்தவர் தான். காலம் மனிதர் வாழ்வில் தானாகவே சேற்றை அள்ளிப் பூச நோயைக் கொண்டுவந்து சேர்த்துவிடும். நோய் வந்துவிட்டால் வலி சினத்தைத் தருவதுதானே இயற்கை. பொறுத்து வாழக் கட்டிய தாலி அச்சப்படுத்திய காலம் கடந்துவிட்டது.
வாழும் போது கட்டிய கணவனிடம் பெற்றசுகம் அனைத்தும், அவன் துன்பப்படும் காலத்தில் மறந்துவிடுவதுதான் இக்காலத்தின் நிகழ்வு என்பதாயிற்று. அவனைத் தாக்கி நிமிர்த்த மனம் ஒப்பவில்லையானாலும் வேறு ஒருவனை அணைக்க எப்படி மனம் வருகின்றதோ புரியவில்லை. ஆனால், சகுந்தலாக்கு அந்தமனம் இருக்கிறது.

வீட்டைவிட்டு வெளியே போவதுதான் அவளுக்குப் பாரிய இன்பம் அதுவும் ருத்ராவுடன் போவது என்றால் கொள்ளைப் பிரியம். சந்திசிரிப்பது பற்றிய அச்சம் அவளுக்கு இல்லை. இருந்திருந்தால், தனதுமகளை இப்படி வளர்த்திருப்பாளா? எப்படி என்று கேட்கின்றீர்களா? வசந்தி,சகுந்தலா பேரின்பம் பெற்றெடுத்த ஒரே பெண்பிள்ளை.

கல்வி என்பது கொஞ்சம் முயற்சி எடுத்தால், பெற்றுக் கொள்வதற்கு ஐரோப்பிய நாடு வேண்டிய உதவிகளை வழங்கும். அதனால் வசந்தி நன்றாகப் படித்தாள். நல்ல தொழிலும் பெற்றாள். சமுதாயக் கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள் அவளுக்குப் புரியாத புதிர்.

வாழ்க்கை என்பது ஒருமுறைதான் அதை வாழ்ந்து முடிக்க எப்படியும் வாழலாம் என்னும் இலட்சியத்தை உடையவள். ஆனால்,தந்தையில் பாசம் அதிகம் இருந்தாலும் தாயின் போக்கில் பிடிப்புபற்றிக் கொண்டதற்கு காரணம் கேட்கமுடியாது. பிள்ளையைத் தாய் சரியான முறையில் வளர்த்தெடுப்பாள் என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவர்தான் பேரின்பம். அதனால்,அவர்கள் இருவரும் பேரின்பத்திற்குச் செய்தது நம்பிக்கைத் துரோகம். அவருக்குமட்டுமா!

”வசந்தி! உனக்குகணவன் வேணுமென்றால்,நான் சொல்வதைக் கேள். உன்ர ஆட்டத்திற்கு எல்லாம் ஆடவேண்டும் என்றால், இலங்கையில் இருந்துஒருவனை இங்கேஎடு. பழகிப் பார். அந்தநேரமேவேறுஒருவனைத் தேடிப்பிடி. அவனோடபழகிப்பார்.

எது ஒத்துவருதோ அவனைக் கல்யாணம் செய். ஐ mean இலங்கையில் இருந்து கூப்பிட்டவனை விட்டுப் போட்டு மற்றவனைக் கல்யாணம் செய். இது ஒன்றும் தவறில்ல. பிடித்தவனைத்தானே கல்யாணம் செய்யவேணும். கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்றுசொல்லியிருக்கின்றார்கள். இவ்வாறே சகுந்தலா மகளுக்குப் புத்திசொல்லி வளர்த்தாள்.

தாய் சொல்லே மந்திரம் என்று நினைத்த வசந்தியும் ராமை இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு இறக்குமதிசெய்தாள். வந்தவனோ காதலி மனம் நிறையக் காதல் சுமந்தவள் என தப்புக் கணக்குப் போட்டான். அன்பாகத்தான் பழகினாள். அளவுக்கதிகமாகக் காதலைக் கொட்டினாள். மதி மயங்கி கண்கெட்ட காதலுக்கு ராமும் அடிமையாக்கினான். தன் உடலெங்கும் அவள் பெயரைப் பச்சை குத்தினான். அவள் இன்றி ஒருமணிப் பொழுதைக் கூட அவனால் தாண்ட முடியவில்லை. ஆனால்,வசந்தியோ ....

"இங்கபாருங்க ராம். உங்களை நான் இங்கே கூப்பிட்டு எடுத்தது உங்களுக்கு நல்லதாப் போயிட்டுது. சும்மா உங்களால் இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு வரமுடியாது. அந்த உதவியை நான் தான் உங்களுக்குத் தந்திருக்கிறேன். நீங்கள் இங்கே வேலை செய்யக் கூடிய அனைத்து வசதிகளும் இருக்கிறது. எனக்கு ராம்...... உங்களைவிட வேறு ஒரு பெடியனில் ஆசை ஏற்பட்டுவிட்டது. அவன் இங்கே பிறந்துள்ளான். எனக்கு அவன் கூட வசதியாகத் தெரிகின்றான். அவனோடப் பழகிப் பார்க்கிறன். பிடிக்கவில்லை என்றால் உங்களைத் திருமணம் செய்கிறேன். ok தானே.

"வாழ்க்கையை எப்படி இலகுவாக எடுக்கிறாய். நான் இங்கை வருவதற்காகவா உன்னோடு பழகினேன். நான் உன்னை என் உயிராக அல்லவா நினைத்தேன்" "Stupid........சேர்ந்து வாழ மனம் ஒத்துப் போகவேணும். எனக்கு உன்ன விட Best தேவை" இப்படிக் கூறித்தான் வசந்தி, ராமைப் பிரிந்தாள் வசந்தியை மறக்க முடியாத வேதனை அவன் வாழ்க்கையை வெறுக்கச் செய்தது. சகுந்தலாவிடம் சொல்லி, வசந்தி மனதை மாற்றலாம் என்று கருதிய ராம், அவள் தாய் சகுந்தலாவிடம் முறையிட்டான்.

"ராம். இந்தக் காலத்துப் பிள்ளைகள் இப்படித்தான் தம்பி. வெள்ளைக்காரப் பிள்ளைகளப் பார் குறைந்தது ஒரு 30 பெடியங்களோட பழகித்தான்,

பிறகு ஒருவனைக் கல்யாணம் செய்வார்கள். நீர் வேண்டுமென்றால் வேறுபெட்டையைபிடியும். ஆனால், கல்யாணம் கட்டிப் போடாதையும். வசந்தி இப்ப புதுப்பெடியனைப் பிடித்திருக்கிறாள். உமக்குத் தெரியும்தானே. அவன் அவளுக்கு ஒத்துவரவில்லை என்றால், உம்மோடதான் வாழ்வாள் தம்பி"

"நல்ல தீர்ப்பு சொல்லியிருக்கிறீங்கள். கல்யாணம் என்பதும்,காதல் என்பதும் உங்களுக்கு வியாபாரமாய் போய்விட்டது. நல்ல அம்மாவும், நல்லமகளும்" என்றபடி ஏக்கம் கொண்ட மனதுடன் நம்பிக்கைத் துரோகத்தையும் சுயநலத்தையும் எண்ணிக்கலங்கினான் ராம்.

வீட்டில் தாலி கட்டியகணவன் தனித்திருக்கத் தன் காதலன் ருத்ராவுடன் தாய் சகுந்தலாவும், இலங்கையில் இருந்து திருமணம் செய்வதற்காக அழைத்தெடுத்த ராமைத் தவிக்கவிட்டுத் தன் காதலனுடன் வசந்தியும் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டு டென்மார்க் நோக்கிப் பயணம் செய்தார்கள்....

# 1.63 கோடிக்கு ஏலம்

சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் பயன்படுத்திய "கொலைகார தொலைபேசி" ரூ.1,63 கோடிக்கு ஏலம் போனது ஜெர்மனி நாஜி சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் பயன்படுத்திய டெலிபோன் ரூ. 1.63 கோடிக்கு ( 2,43,000 டாலர்கள்) ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏலம் அமெரிக்காவில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த "கொலைகார தொலைபேசி"-யை அதிக தொகை கொடுத்து ஏலம் எடுத்தவரின் பெயர் சில காரணங்களினால் வெளியிடப்படவில்லை. இந்தப் போனில் நாஜி தலைவரின் பெயரும் குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தப் போனை சோவியத் ராணுவ வீரர்கள் பிரிட்டன் அதிகாரி சர் ரால்ப் ரேய்னரிடம் அளித்துள்ளனர். சர் ரேய்னர் ஹிட்லர் கடைசி காலங்களில் பதுங்கியிருந்த பதுங்கு குழியிலிருந்து இந்தப் போனை எடுத்துள்ளார். இதனை ரேய்னரின் இறப்புக்குப் பிறகு அவரது மகன் ரேனல்ஃப் ரேய்னர் பாதுகாத்து வந்தார். முதலில் இது கறுப்பு வண்ணத்தில்தான் இருந்தது. பிறகு இது சிகப்பு கலராக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதே ஏலத்தில் ஹிட்லர் வளர்த்ததாகக் கருதப்பட்ட அல்சேஷன் நாயின் பீங்கான் வார்ப்புருவத்தை வேறு ஒருவர் 24,300 டாலர்களுக்கு வாங்கினார்.ஹிட்லர் பயன்படுத்திய இந்த டெலிபோன் "அனைத்து கால மிக பயங்கரமான ஆயுதம்" என்று வர்ணிக்கப்படுகிறது

# தாயகச் செய்திகள் சில.....

## நாளாந்தம் 300க்கு மேற்பட்டோர் விவாகரத்து....

இலங்கையில் நாளாந்தம் 300க்கு மேற்பட்டப்பட்டோர் விவாகரத்து செய்து கொள்வதாக கலாச்சார விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார் இலங்கையில் திருமணமான தம்பதியினர் மத்தியில் குடும்ப விரிசல்கள் அதிகளவில் ஏற்படுவதனால் அதற்கு தீர்வு இன்றி விவாகரத்து நடைபெறுகின்றன. 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுக்கு அமைவாக இலங்கையில் நாளாந்தம் 300 பேர் விவாகரத்து பெறுவதாக கண்டறியப்பட்டுள்ளது.குறைந்த வயதினர் மற்றும் ஒரே வயது கொண்டோர் திருமணம் செய்து கொள்வதால் குடும்ப விரிசல் ஏற்படுகின்றன. இதுவே அதற்கு முக்கிய காரணமாகும்.

## 74 கோடி டொலர் கடனில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை 74 கோடி அமெரிக்க டொலர் கடனில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் கடந்த ஆட்சியில் சில திட்டங்களுக்கு ஒதுக்கிய செலவை விட 3 மடங்கு அதிகமாக செலுத்த வேண்டி நேர்ந்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் 14 இலட்சம் மாணவர்கள் காலை உணவு உட்கொள்வதில்லை: ஆய்வில் தகவல்...

இலங்கையில் 14 இலட்சம் மாணவர்கள் காலை உணவு உட்கொள்வதில்லை என ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குடும்பங்களின் பொருளாதாரப் பிரச்சினை இதில் அதிக தாக்கம் செலுத்துவதாக ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. 2016 ஆம் ஆண்டு கல்வி அமைச்சு வெளியிட்ட தகவல்களின்படி இலங்கையில் 10,162 பாடசாலைகளில் 41,43,330 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.இந்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி அதாவது 14 இலட்சம் மாணவர்கள் காலை உணவு உட்கொள்வதில்லையென ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வு மையத்தின் போஷாக்குப் பிரிவு தெரிவித்துள்ளது.



# மூத்த பத்திரிகையாளர் கோபு காலமானார்.....

இலங்கையில் மூத்த தமிழ் பத்திரிகையாளரான கோபு எனப்படும் எஸ்.எம். கோபாலரெத்தினம் 14-11-2017 புதன்கிழமை 87-வது வயதில் மட்டக்களப்பில் காலமானார். யாழ்பாணத்தில் வெளிவந்த 'ஈழமுரசு 'பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிய வேளை 1987ம் ஆண்டு நவம்பர் 23-ஆம் தேதி இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்திய அமைதிப்படையினரால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது அனுபவத்தை "ஈழ மண்ணில் ஓர் இந்திய சிறை" என்ற தலைப்பில் எழுதினார். இந்த கட்டுரை "ஜூனியர் விகடன்" இதழில் தொடர் கட்டுரையாக வெளியாகியிருந்தன.

இலங்கை தமிழ் பத்திரிகை உலகில் கோபு ,எஸ்.எம்.ஜி என பலராலும் அறியப்பட்ட எஸ்.எம். கோபாலரெத்தினம் ஆணித்தரமான அரசியல் தலையங்கங்கள், கட்டுரைகள் மற்றும் செய்திகள் மூலம் துணிச்சல் மிக்க பத்திரிகையாளராக விளங்கினார்.

பத்திரிகைத்துறை வரலாற்றில் ஆறுரை தசாப்த கால சாதனை...

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கோபாலரத்தினம் 1960களில் வீரகேசரியில் இணைந்து தனது பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். அதன் பின்னர் 1968களில் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து, பின்னர் அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றினார். கோபாலரத்தினம் அவர்களின் காலத்திலேயே ஈழநாடு பத்திரிகை மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றது.

1981ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகை எரியூட்டப்பட்ட போது அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அதன் பின்னர் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த போது, இந்திய இராணுவத்தால் சிறைவைக்கப்பட்டார். அந்த சிறை அனுபவங்களை தொடராக எழுதினார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த "தினக்கதிர்" தினசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் ஆலோசகராகவும் பின்னர் கடமையாற்றினார்.

இலங்கையின் மூத்த பத்திரிகை யாளர்களான கானமயில்நாதன், திருச்செல்வம், குகநாதன், கந்தசாமி, அனந்த பாலகிட்ணர் போன்ற பல பத்திரிகையாளர்களை செதுக்கிய பெருமை எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களையே சாரும். 2000ஆம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பில் தங்கியிருந்த அவர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக இருந்து அச்சங்கத்தை வழிநடத்தினார். நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த எஸ். எம்.கோபாலரத்தினம் அவர்களின் கைகள் இன்று ஓய்ந்து விட்டன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஊடகச் சமராடிய உத்தமர் கோபுவை தமிழர்கள் இழந்து நிற்கின்றார்கள். தமிழ் மக்களின் அவலங்களையும் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் துணிவுடனும் தளராதும் வெளிக்கொண்டு வந்த சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் எஸ். எம்.ஜி. கோபலரட்ணம் அவர்களை (கோபு ஐயா) எமது மக்கள் இழந்துள்ளனர். அவரது வாழ்க்கைப் பயணம் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் பிரதானமானது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள், மற்றும் அவர்கள் மீதான ஒடுக்கு முறைகள், அவ் ஒடுக்கு முறைகளின் வாயிலாக எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களை அரசுகளின் தடைகளைத் தாண்டி வெளிக்கொண்டு வந்த சுதந்திர நாயகனாகவே கோபு உள்ளார். போர்க்கால அவலங்களின் உண்மைகளை துணிவுடனும் தளராதும் வெளிக்கொண்டு வந்த சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் எஸ்.எம். ஜி. கோபலரட்ணம் அவர்களை (கோபு ஐயா) எமது மக்கள் இழந்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள், மற்றும் அவர்கள் மீதான ஒடுக்கு முறைகள், அவ் ஒடுக்கு முறைகளின் வாயிலாக எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களை

அரசுகளின் தடைகளைத் தாண்டி வெளிக்கொண்டு வந்த சுதந்திர நாயகனாகவே கோபு உள்ளார். போர்க்கால அவலங்களின் உண்மைகள் மறைக்கப்படக்கூடாது என்பதற்காக கோபு ஐயா போராடினார். துப்பாக்கிகளுக்கும், சிறை வாழ்க் கைக்கும் அவர் அஞ்சவில்லை.

பேனா என்ற ஆயுதத்தினைக் கையில் ஏந்திய ஓர் போராளியாகவே எம் விடுதலைக்காக உழைத்தார். அவரின் பேனா சுடுகலன்களை கண்டு அஞ்சவில்லை. தான் ஊடகத்துறையில் எதிர்கொண்ட சவால்களை அவர் எப்போதும் அனுபவமாகவே எடுத்துக்கொண்டார்.

1953 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பத்திரிகைத்துறைக்கு பங்காற்றுவதில் இருந்து அவர் ஓய்வெடுக்கவில்லை. இவ்வாறான ஊடக ஜாம்பவான் ஒருவரையே தமிழ்த் தேசம் இழந்து நிற்கின்றது.

1960 ஆம் ஆண்டுகளில் ஈழநாடு பத்திரிகையில் செய்தி ஆசிரியராக இணைந்துகொண்ட அவர் அப் பத்திரிகையின் வளர்ச்சிக்காக 20 ஆண்டுகள் பாடுபட்டார். அப் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக அரும்பாடுபட்டார். தொடர்ந்து காலைக்கதிர், செய்திக்கதிர், ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளில் பிரதம ஆசிரியராக உழைத்தார். 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளிவந்த தினக்கதிர் பத்திரிகையின் ஆரம்பத்திற்காக பணியாற்றினார்.

ஈழமுரசு பத்திரிகையில் 1983 இல் ஆசிரியராக பணியாற்றிய சமயம் சிறை வாழ்க்கையினைக் கூட அவர் அனுபவித்தாகவேண்டியிருந்தது. இவ்வாறாக இனத்தின்பால் கரிசனைகொண்டு மகோன்னத பணியைத் திறன்பட ஆற்றிய ஓர் ஊடகக் குருவை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றனர்.

பத்திரிகைப் பணி என்பது யுத்த காலத்தில் ஒன்றும் சாதாரணமானதல்ல. அதுவும் ஒரு தமிழ் உணர்வுள்ள ஊடகனாகப் பணியாற்றுவது மிகவும் ஆபத்து மிக்கது என்பதை உணர்ந்திருந்தும் அர்ப்பணித்துப் பணியாற்றிய எஸ். எம்.ஜி.யின் வாழ்க்கைப் பயணம் இனத்திற்கு பலமாக அமைந்தது.

ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற ஆசியர் தலையங்கங்களின் தொகுப்பு, பத்திரிகைத் துறையில் அரை நூற்றாண்டு, ஈழம் ஓர் முடிவில்லாப் பயணம் போன்ற

நூல்கள் அவரின் ஊடக வாழ்க்கையின் அனுபவங்களையும் ஆளுமைகளையும் சொல்லி நிற்கின்றன.

கடந்த சமாதான காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைவரால் கிளிநொச்சியில் வைத்து பத்திரிகை ஆசிரியர் கோபு அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அக் கௌரவத்தினை ஏற்றுக்கொண்டு இளம் ஊடகவியலாளர்களை பயிற்றுவிப்பதற்கான பொறிமுறையை நிறுவும்படி அங்கு அவர் கேட்டிருந்தார். ஆகவே உயிர் பிரியும் வேளையிலும் எஸ்.எம்.ஜீ.யின் மூச்சு காத்திரமான தமிழ் ஊடகத்துறை என்றே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கோபு என அழைக்கப்படும் இவர் வீரகேசரியில் 1962 இல் முதலில் ஒப்புநோக்காளராகவே இணைந்தவர். அதன் பின்னர் ஆசிரிய பீடத்தில் ஒரே சமயத்தில் அலுவலக நிருபராகவும் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர். அக்காலப்பகுதியில் அவர் பெற்ற மாதச்சம்பளம் 72 ரூபாதான். 1960 இல் வீரகேசரியில் நடந்த வேலை நிறுத்தத்தின்போது அந்த வேலையை இழந்து யாழ்ப்பாணம் சென்று ஈழநாடு பத்திரிகையில் இணைந்தார். கோபு, வீரகேசரி, ஈழநாடு ஆகியவற்றில் மாத்திரமின்றி ஈழமுரசு, தினக்கதிர், செய்திக்கதிர், ஈழநாதம், சுடரொளி முதலான பத்திரிகைகளிலும் பணியாற்றியவர்.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்திய அமைதிப் படை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டது. இந்தியப்படையினரால் சுமார் இரண்டு மாதங்கள் சிறைவைக்கப்பட்டார்.

தனது சிறை அனுபவங்களை ஜீனியர் விகடனில் தொடராக எழுதினார். ஈழமண்ணில் ஒரு இந்தியச்சிறை என்ற தலைப்பில் அவர் எழுதிய குறிப்பிட்ட தொடர் பிரான்ஸில் குகநாதன் வெளியிட்ட பாரிஸ் ஈழநாடு வார இதழிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

பின்னர் தனி நூலாக வெளியானது. ஏற்கனவே அவர் இதழ்களில் பதிவுசெய்த ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பாக "அந்த ஒரு உயிர்தானா உயிர்" என்ற நூலையும், பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு, முடிவில்லாப்பயணத்தில் முடியாத வரலாறு ஆகிய நூல்களையும் வரவாக்கியுள்ளார்.

# கோபுவும் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கமும்...

கோபு கடமைபுரிந்த யாழ் ஈழநாடு பத்திரிகையில் நானும் சில ஆண்டுகள் பத்திரிகை நிருபராகக் கடமைபுரிந்திருக்கிறேன். அந்தவகையில் அவரை நானும் நன்கு அறிந்து வைத்திருந்தேன்.

அவர் இரண்டு தடவைகள் யேர்மனிக்கு வந்து சென்றார். (2002, 2008) அவர் இங்கு வருகைதந்த போது எமது சங்கம் அவரை கௌரவித்தது. அப்போது அவரின் ஐம்பது ஆண்டுகால பத்திரிகைப் பணியைப் பாராட்டி அவருக்கு பொன்னாடை போர்த்து பட்டயம் வழங்கிக் கௌரவித்தோம்.

இவ்விழாவில் ஐரோப்பா வாழ் தமிழ் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பெருந்தொகையினர் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கவிடையமாகும். அவரோடு தாயகத்தில் பத்திரிகைகளில் பணிபுரிந்த முன்னாள் பணியாளர்களும் இவ்விழாக்களில் கலந்துகொண்டு அன்பைப் பரிமாறிச் சென்றமையும் நினைவுகொள்ளத் தக்கவிடயமாகும்.

இத்துடன் அவரால் எழுதிவெளியிடப்பட்ட மூன்று நூல்களையும் ("பத்திரிகைப் பணியில் அரைநூற்றாண்டு" "அந்த உயிர்தானா உயிர்" "ஈழமண்ணில் இந்தியச்சிறை") இங்கு அறிமுகப் படுத்தி விழா எடுத்து அந்த நூல்களை விற்பனை செய்து எமது சங்கள் உதவியது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

சிறந்த ஒரு ஊடகவியலாளர், பத்திரிகை ஆசிரியர், சுமார் 65 ஆண்டுகால எழுத்தாளர் ஆகிய கோபு அவர்களின் இழப்பானது தமிழ் உலகத்திற்குப் பேரிழப்பாகவே கருதலாம். எங்கள் சங்கத்தோடு அவர்கொண்டிருந்த ஈடுபாடும் அன்பும் மரியாதையும் எம்மால் மறக்கமுடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம்மிக்க சிறந்த ஒரு தமிழ்மகன். அன்னாரின் இழப்பானது ஈடுசெய்யமுடியாத இழப்பாகவே நாம் கருதுகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தவர்களுக்கு எங்கள் இரங்கலைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

-ஆசிரியர்-

# கனடாவிலிருந்துதொகுப்பாளர் கருத்து....

## முதியவர் முத்துகள் முப்பதுக்கு ஒரு சிறு கதை

தமிழ் இலக்கியம் எல்லா வயதினருக்கும் பொதுவானது. குழைந்தைகள் இலக்கியம், காதல் இலக்கியம், அறிவியல், வரலாறு, அரசியல், குடும்பம் போன்று பல பார்வைகளில் படைப்பாளிகள் எழுதுவார்கள். முதியோரின் பிரச்சனைகள் பல. தனிமை, அல்செய்மார் என்ற மறதி நோய். போன்று பலவிதமன வியாதிகள், முதுமையில் கணவன் மனைவி உறவு, பழைய பழக்க வழக்கத்தில் இருந்து மாறாமை, பிடிவாதம், எதிர்பார்ப்பு.. மருந்து குளுசைகளை நம்பி வாழ்பவர்கள் தலைமுறை இடவெளி. சிலர் இறுதி காலத்தில் கவனிக்க ஒருவரும் இல்லாத காரணத்தால் முதியோர் இல்லத்தைத் தஞ்சம் அடைகிறார்கள்.

பல முதியோர்கள் கடந்த காலத்தில் தாம் வகித்த பதவி. பிறருக்கு செய்த உதவி, தமக்கு கிடைத்த பேரும், புகழும் பற்றி பேசுவதில் இன்பம் காண்பார்கள் ஒரு காலத்தில் விளயாட்டு வீரராக இருந்தவர் முதுமையின் போது கைக்கோலையும் . நாற் சக்கர வண்டியையும் நம்பி வாழ வேண்டிய நிலை போன்ற பலவிடயங்களை வைத்து சுவையான கதைகள் அடங்கியது இத் தொகுப்பு பல முதியோருக்கு எழுதும் திறமை இருந்தும். இனி என்ன எழுதிக் கிழிக்கப் போகிறோம் என்று எழுதுவதை நிறுத்தி விடுவார்கள். உடலில் உள்ள வியாதியை மறக்க, வாசிப்பும் எழுதுவதும் பகிர்வதும் ஒரு வகை தியானமாகும். இந்தக் கதைக் கொத்தில் பல நாடுகளில் இருந்து முதியவர்கள் உருவாக்கிய சுவையான சிறுகதைகளை சேர்த்து நான் எழுதிய முத்துக்களோடு கோத்து முதியோர் உருவாக்கிய முத்து மாலையாக உங்கள் பார்வைக்கு சமர்பிக்கிறேன். சாதனை படைத்த நான்கு முதியவர்களின் கதைகள் இத் தொகுப்பில் உண்டு இதில் வரும் நிதி ஒரு முதியோர் சங்கத்தின் நூலகத்தின் விருத்திக்குப் பாவிக்கப்படும். உங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்
ஒரு முதிய தமிழன்!.......ஒன்டாறியோ கனடா!........

Pon Kulendiren
3927 Beacham Street
Mississauga, ON, L5N 6S9
Canada
289 652 9185
647 937 1527

www: CreatorPon.com
www: KuviyamCanada.com
Kulendiren@yahoo.com

# வலி போக்குமா வழி

வசந்தா-ஜெகதீசன்
யேர்மனி

தாயகத்து ஊற்று நிலம் தாங்குகின்ற வலி
தளர்வுகளில் தமிழினமே ஏங்குகின்ற வழி
படர்கிறதே பல திசையில் போர் தந்த வலி
பாதையிட்டு செப்பினிட யார் இதற்கு அணி

நாற்றிட்ட விருட்சமாய் நம்மிழீழக்கனி
நலிந்து நொந்து நாளாந்தம் தாங்கும் பல வலி
உடைந்து போன உள்ளங்களே ஈழ மண்ணின் விதை
இழந்து போன காயங்களே ஈட்டிதைக்கும் முளை

வீரத்தின் கொடையிலே வித்தானோர் பலர்
கோரத்தின் சாவிலே அழிவுற்றோர் சிலர்
ஞாலத்தின் கண்களில் இருள் சூழ்ந்த நிலை
நம்பிக்கை வழி காட்டி வலி போக்க வருவீர்
இழந்தவைகள் ஈடு செய்ய நீங்களே
இடர் போக்கும் வலி அகற்ற வழி
வழி சொல்வீர் இனி!..

# வருடும் நினைவுகள்

சுழற்சி தரும் நினைவு வட்டம்
சுற்றும் காற்றாடி போல இதயம் தட்டும்
பாசவலையில் கயிறு கோர்த்து
பழகிய நினைவில் அழகிய கோலம்
அழியாச்சுவடாய் அலையென மோதும்
வருடும் நினைவுகள் வற்றாத சுரங்கம்
அறுகம் புல்போல் ஆயிரம் வேர்களை பரவும்
வெற்றிடமற்றது வெண்மை பூண்டது
சுற்றிடும் நினைவோ சுகத்தை தருவது
தத்துவம் இங்கு தவிடுபொடியே
தாய்மனம் என்றும் தனித்துவ உலகே
சுற்றம் சூழல் சுவாசத்தின் மலர்கள்
சுதந்திர தேசமாய் தடம்பதித்திட்ட நாட்கள்
எத்தனை சுகத்தில் எந்தை மண் ஞாபகம்
முட்டியே மோதும் முந்தைய நினைவுகள்
முற்றுப்புள்ளியே அற்ற ஞாபகப்பள்ளிகள்!...

# நோபல் பரிசு 2017 (Nobel Prize)

**விருதுகள்....**

**இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவமும் உடலியங்கியல், அமைதி, பொருளியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவோருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும்.**
**பரிசு.வழங்கியவர்**
**சுவீடன் அக்காடமி,**
**ரோயல் சுவீடிய அறிவியல் கழகம்,**
**கரொலீன்ஸ்கா கல்விநிலையம், நோர்வே நோபல் குழ**
**நாடு – சுவீடன் நோர்வே (அமைதிப் பரிசு மட்டும்) நோபெல்பரிசு**(Nobel Prize) **அல்லது நோபல் பரிசு (பழைய வழக்கு) என்பது ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கும் தொழில்நுட்பங்கள் அல்லது கருவிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படும். உலகளவில் பெரிதும் மதிக்கப்படும் பரிசு ஆகும். அமைதிக்கான நோபல் பரிசுமட்டும் சில நிறுவனங்களுக்கும் வழங்கப்படுவது உண்டு. எனினும், சிலர் இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள மறுத்ததும் உண்டு.**

**இது வேதியியலாளர் ஆல்ஃபிரட் நோபெல் என்பவரால் 1895ல் தொடங்கப்பட்டது. முதல் பரிசு 1901 ல் வழங்கப்பட்டது. சில ஆண்டுகள் ஒரு பரிசு கூட அறிவிக்கப்படாமல் போனதும் உண்டு. (உலகமாகா யுத்த காலங்களில்) எனினும், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இந்தப் பரிசு அறிவிக்கப்படும். நோபெல் பரிசு, திரும்பப் பெறத்தக்கதல்ல. இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம் அல்லது உடலியங்கியல் மற்றும் அமைதி ஆகியவையே ஆல்ஃபிரட் நோபெல் அவர்களின் உயில் படி ஏற்படுத்தப்பட்ட பரிசுகளாகும். பொருளியலுக்கான நோபல் நினைவுப் பரிசு 1968 ல் சுவீடன் நடுவண் வங்கியினால் அதன் 300 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக ஏற்படுத்தப்பட்டது. பரிசு பெறும் ஒவ்வொருவரும், ஒரு தங்கப்பதக்கமும் ஒரு பட்டயமும், நோபெல் அறக்கட்டளையின் அவ்வருட வருமானத்தைப் பொறுத்து பரிசுப் பணமும் பெறுவர்.**

# நோபல் பரிசும் தமிழரும்

நோபல் பரிசினை இதுவரை மூன்று தமிழர் பெற்றுள்ளனர். இந்தப் பெருமைக்குரியோர் ச. வெ. இராமன் (1930), சுப்பிரமணியன் சந்திரசேகர் (1983), வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் (2009) ஆவர்.

## நோபல் பரிசு வழங்கப்படும் துறைகள்

| | |
|---|---|
| Chemistry | **இரசாயனம்** |
| Economics | **பொருளாதாரம்** |
| Literature | **இலக்கியம்** |
| Peace | **சமாதானம்** |
| Physics | **பௌதீகம்** |
| Medicine | **மருத்துவம்** |

## 2017 விருதுகள் பட்டியல்...

**(மொத்தம் 12 பேருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கின்றது)**

| | | | |
|---|---|---|---|
| பௌதீகம் | – 3 | பேருக்கு | வழங்கப்பட்டுள்ளது |
| இரசாயனம் | – 3 | ” | ” |
| பொருளாதாரம் | – 1 | ஆளுக்கு | ” |
| இலக்கியம் | – 1 | ஆளுக்கு | ” |
| மருத்துவம் | – 3 | பேருக்கு | ” |
| சமாதானம் | – 1 | ஆளுக்கு | ” |

**ஜேர்மனியர்களுக்கு இதுவரை 82 நோபல் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. அவையாவன.**

| | | |
|---|---|---|
| இரசாயனம் | – 25 | தடவைகள் |
| பௌதீகம் | – 25 | ” |
| மருத்துவம் | – 18 | ” |
| இலக்கியம் | – 08 | ” |
| சமாதானம் | – 05 | ” |
| பொருளாதாரம் | – 01 | ” |

# 2017- வழங்கப்பட்ட நோபல் பரிசுகள்



Physics - இயற்பியல் (பௌதீகவியல்)

Rainer Weiss - ஜேர்மனி
Barry Barish - அமெரிக்கா
Kip Thorne - அமெரிக்கா

Chemistry - வேதியல் (இரசாயனவியல்)

Jacques Dubochet - சுவிற்சலாந்து
Joachim Frank - ஜேர்மனி
Richard Henderson - இங்கிலாந்து

Physiology or Medicine - மருத்துவம் (உடற்கூற்றியல்)

Jeffrey C. Hall - அமெரிக்கா
Michael Rosbash - அமெரிக்கா
Michael W. Young - அமெரிக்கா

Literature - இலக்கியம்

Kazuo Ishiguro - யப்பான்

Economics - பொருளாதாரம்

Richard Thaler - அமெரிக்கா

Peace - சமாதானம்

International Campaign to Abolish Nuclear Weapons
சர்வதேச அணு ஆயுத ஒழிப்பு பிரசாரக்குழு
(தலைமை அலுவலகம் - சுவிற்சலாந்து)



## யேர்மனியில்.....
## தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கலைஞர் கௌரவிப்பு!
## "குதிரை வாகனம்"நாவல் அறிமுகம்.

-மானிடப் பிரியன்

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் காலத்திற்குக்காலம் தமிழ் வளர்ச்சிக்கு உதவியோரையும் கல்விமான்களையும் இலக்கியவாதிகளையும் சமூகத்தொண்டுகள் புரிந்தோரையும் அழைத்து மதிப்பளித்து சிறப்பான பாராட்டுகளை வழங்கி அவர்களை பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்து பாராட்டுவது நடைமுறை. அந்தவழியில் சென்ற 14.10.2017 சனிக்கிழமை கௌரவிப்பு விழா சிறப்புற நடைபெற்றது.

இவ்வருடம் இக் கௌரவத்தை நான்கு பேருக்கு வழங்கி மகிழ்ந்தது இச்சங்கம். யேர்மனியைச்சேர்ந்த கவிஞர் திரு முகில்வாணன் எழுத்தாளர் கவிஞர் திரு.ப. பசுபதிராசா, வில்லிசைக் கலைஞர் "நாச்சிமார் கோவிலடி" திரு. தம்பையா ராஜன் டென்மார்க் எழுத்தாளர் திரு வி.ஜீவகுமாரன், ஆகிய இந்த நால்வருமாவர். இவர்கள் நால்வரும் வெள்ளிவிழாக் கண்ட கவிஞர்கள் எழுத்தாளர்கள் கலைஞர்களுமாவர் என்பது குறிப்பிடத் தக்க விடையமாகும்.

மேற்படி நிகழ்வு யேர்மனி டோட்முண்ட் நகரில், தமிழர் அரங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் திருவ.சிவராசா அவர்கள் தலைமை தாங்கினார்.

மங்கள விளக்கை டென்மார்க்கில் இருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர். திருமதி கலாநிதி ஜீவகுமாரன், திருமதி. ஐரின் இராசப்பா (முகில்வாணன்) இருவரும் ஏற்றிவைத்தனர். மௌன அஞ்சலியைத் தொடர்ந்து வரவேற்புரையை சங்கத்தின் செயலாளர் திரு பொன்.புத்திசிகாமணி அவர்கள் வழங்கினார்.

தமிழ் மொழி வாழ்த்தை டோட்முண்ட் வள்ளுவர் பாடசாலை சங்கீத ஆசிரியை திருமதி ஞானாம்பாள் விஜயகுமார் அவர்களின் மாணவிகள் செல்விகள் தமிழினி பரமேஸ்வரன், கோசிகா சத்தியசீலன் ஆகியோர் இனிய குரலில் பாடி மகிழ. வரவேற்பு நடனத்தை ஒபகௌசன் நகர அறிவாலய பாடசாலை மாணவிகள் செல்விகள் பரிஸ்ரா மரியதாஸ், ஸ்ரெவானி மகாலிங்கம், கவிநிலா சபேசன் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

தலைமை உரையை சங்கத்தின் தலைவர் திரு வ.சிவராசா அவர்கள் நிகழ்த்தினார். அவரது உரையில் சங்கத்தின் வளர்ச்சி வரலாறு சாதித்த நிகழ்வுகள் முக்கியமாக எடுத்துரைத்தார்.

வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்கின்ற உன்னத பணியை எமது சங்கம் நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தி வருவதை நீங்கள் பெரும்பாலும் அறிந்திருப்பீர்கள். அந்த வகையிலேயே இந்தப் புகழ்பெற்றவர்களை மதித்து அழைத்து இன்று கௌரவிக்கின்றோம். உங்கள் முன் இருப்பவர்கள் அனைவரும் தங்கள் வாழ் நாளில் தமிழுக்கும் தமிழ் இலக்கியம் கலை கலாச்சார மொழி வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர்கள். காலத்தால் மறக்க முடியாதவர்கள். இவர்களைக் கௌரவிப்பதால் எமது சங்கம் பெருமை அடைகிறது என்றார்.

சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும் சங்கீத ஆசிரியையுமான திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்கள் திரு கவிஞர் முகில்வாணன் அவர்களைப்பற்றி வாழ்த்திப் பேசினார். வில்லிசைக் கலைஞர் நாச்சிமார் கோவிலடி திரு.ராஜன் அவர்களை சங்கத்தின் செயலாளர் திரு பொன்.புத்திசிகாமணி அவர்கள் வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

கவிஞரும் எழுத்தாளருமான திரு ப.பசுபதிராசா அவர்களை எமது சங்கத்தின் உதவிச் செயலாளர் திருமதி கீதா பரமானந்தன் பாராட்டி உரைநிகழ்த்தினார். பிரபல எழுத்தாளர் டென்மார்க்கைச் சேர்ந்த திரு.ஜீவகுமாரன் பற்றி எமது சங்கத்தின் பொருளாளர் திரு அம்பலவன் புவனேந்திரன் அவர்கள் நயம்மிக்க கவியால் புகழ்ந்து பாடினார்.

நால்வருக்கும் பொன்னாடையும் மாலையும் அணிவித்தும் பட்டயங்கள் வழங்கியும் சங்கம் சிறப்புச் சேர்த்தது. சங்க உறுப்பினர்களான திரு. ஏகானந்தராசா, திரு. குகதாசன், திரு. வரதராசன், திரு.விக்கினராசா திருமதி இராஜேஸ்வரி சிவராசா, திருமதி சாந்தினி துரையரங்கன் ஆகியோரும் பாராட்டுப் பெற்றவர்களுக்கு பொன்னாடை, பூமாலை அணிந்து கௌரவித்தனர்.

கவிஞர் திருமுகில்வாணன், கவிஞர் திரு பசுபதிராசா, எழுத்தாளர் திரு ஜீவகுமாரன், வில்லிசைக் கலைஞர் நாச்சிமார்கோவிலடி ராஜன் ஆகியோர் பாராட்டுக்களையும் மரியாதையையும் ஏற்றவர்களாய் சிறப்புற ஏற்புரையை நிகழ்த்தினார்கள்.

எமது சங்கத்தின் செயற்பாட்டிற்காக நன்றியும், இச்சேவையைச் செய்யும் யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் சிறப்புற வளரவேண்டுமெனவும் வாழ்த்தினார்கள்.

'குதிரை வாகனம்" நாவல் அறிமுகவுரையை சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கௌசி சிவபாலன் ஆற்றினார். மிகச்சிறப்பான அவர் உரையால் பாராட்டுகளை சபையோர் வழங்கத்தவறவில்லை.

நூல் அறிமுகத்தில் திரு ஜீவகுமாரன் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் நாவல் சிறுகதை இலக்கியம் பற்றி சிறப்பாகப் பல விடையங்களை நயத்தோடு எடுத்துரைத்தார்.

முதல் பிரதியை புலம்பெயர் எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. சபேசன் அவர்களும் புலம்பெயர் எழுத்தாளர் சங்கத்தலைவர் ஏலையா திரு. க. முருகதாசன் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து டென்மார்க்கிலிருந்து வருகைதந்த எழுத்தாளர் திருமதி கலாநிதி ஜீவகுமாரன் அவர்கள் சிறப்பான உரையொன்றை நிகழ்த்தினார்.

எசன் நகர "கனகசபை" கலாலய மாணவிகளான செல்விகள் சஜித்தா ஆசீர்வாதம், சாருகா ராகவன், சஜித்தா பிரபாகரன், சுபேதா

பிரபாகரன், நிதுசா ஆசீர்வாதம், சகானா பிரபாகரன் ஆகியோரின் சிறப்பான நடனம் ஒன்றை ஆடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

சங்க உறுப்பினர்களான கவிமணி குகதாசன் தர்மலிங்கம், திருமதி நகுலா சிவநாதன், இவர்களுடன் புலம்பெயர் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஏலையா முருகதாசன், எழுத்தாளர் திரு சபேசன். அகரம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் திருத. ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

சங்கஉறுப்பினர் திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுபெற்றது. நிகழ்ச்சி ஒருங்கமைப்பை சங்கத்தின் உபதலைவர் திரு பொ. சிறிஜீவகன் அவர்கள் நெறிப்படுத்தினார். உறுப்பினர் திருமதி சாந்தினி துரையரங்கன் அவர்கள் சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

## இலங்கை தகவல்கள்...

(1) வாகன விபத்துக்களில் 1.700 பேர் பலி
இந்த வருடத்தின் முதல் 7 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 1.700 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வீதி பாதுகாப்பிற்கான தேசிய சபை இதனை தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியினுள் இடம்பெற்ற விபத்துக்கள் காரணமாக பாதசாரிகள் 533 பேர் பலியாகினர். அதேபோல, இந்த காலப்பகுதியினில் 580 இற்கும் மேற்பட்ட உந்துருளி ஓட்டுனர்கள் மரணித்துள்ளதுடன், ஓட்டுனருடன் பயணித்த 106 பேரும் மரணமாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, ஏனைய வாகனங்களில் பயணித்த 250 பயணிகள் மற்றும் 142 வாகன சாரதிகளும் பலியாகியுள்ளதாக வீதி பாதுகாப்பிற்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

(2) இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை கடந்த செப்டம்பர் மாதத்தில் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 2.3 வீதமாக அதிகரித்திருப்பதாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரித்தானியா, கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா, உக்ரைன், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த 9 மாதத்தில் 15,51,000-இற்கும் அதிகமானோர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.



# யேர்மனியில்...... "கந்தலோக கலாபம்" நூல் வெளியீட்டு விழா

யேர்மனியில் வசித்து வருபவரும் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து எழுதிக்கொண்டிருப்பவரும் தமிழ், சமூக ஆர்வலருமான தமிழ்மணி திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன் அவர்களால் எழுதிய நூலின் வெளியீட்டுவிழா கடந்த 16.10.2017 அன்று யேர்மனி சார்லண்ட் மாநிலத்தின் சார்புறாக்கன் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் மிக நீண்டகாலம் யேர்மனியில் வாழ்ந்து வருகின்றபோதும் தாய்மொழியின் வளர்ச்சிப் பணியில் உழைத்துவருபவராவர். இவரின் எழுத்துப் பணியானது ஐரோப்பிய நாடுகளில் சிறப்பாகப் பேசப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் முன்னாளில் மல்லாவி-யோகபுரம் உப அஞ்சல் அலுவலக உப அஞ்சலதிபராகவும் பின்பு துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகத்திலும் பணங்காமம்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்திலும் பணியாற்றியவராவர்.

நிர்வாகத் திறமை மிக்கவர் என அறிந்திருந்த எனக்கு இவரது இன்னொரு சிறப்பை இந்நூல் வெளியீட்டு விழா காட்டியது.

"கந்தலோக கலாப நூல்" கந்தனின் பெருமையைக்கூறும் நூல்–சஷ்டி விரத காலத்தில் சிறப்பாகப் படிக்கப்படும் நூலாகும். இப்பெருமை மிக்க நூலை தனது கணவனாரின் அறுபதாவது வயது பிறந்த நாள் விழாவில் அம்பிகை ஆலயத்தில் அறிமுகம் செய்து வெயியீடு செய்யப்பட்டது சிறப்பான விடையமாகும்.

யோ்மனியில் கடந்த பதினாறு வருடங்களாக இயங்கிவரும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தோடும் இந் நூலாசிரியர் இணைந்திருக்கிறார். எழுத்தாளர் சங்கத்தினர் கலந்து கொண்ட இவரது முதல் வெளியீடும் இதுவாகும். எழுத்தாளர் சங்கத்தோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக நாம் விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என முடிவெடுத்துச் சுமார் நானூறு கிலோமீட்டர் பயணம் செய்து இந்த விழாவில் கலந்து கொண்டமை பெருமையாகவும் மகிழ்வாகவும் இருந்தது. எதிர்பாராத பயணம். நூலாசிரியரின் தமிழ்ப் பணியைப் பாராட்ட வேண்டும் என்ற நல் நோக்கில் நாம் அங்கு குழுவாகச் சென்றிருந்தோம்.

இவ்விழாவில் எம்மை வியக்க வைத்தவை பல. அதாவது ஸ்ரீ மகாமாரி அம்மன் சந்நிதானத்தில் அம்மன் தலைமையில் விழா நடைபெற்றது. நல்ல வாசகர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டமை சிறப்பாக அமைந்தது. அம்பிகையின் புகழை பல்கலைக்கழக மாணவி செல்வி செ.மிருதுளா பாடியபோது சபையோர் மெய் சிலிர்த்து நின்றனர்.

நூலாசிரியை வழங்கிய நிகழ்ச்சி நிரலை மிக மிக அழகாக, நேர்த்தியாக ஒலிவாங்கியில் நெறிப்படுத்தியவர் யோ்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவர் தமிழ்மணி திரு.பொ. சிறீஜீவகன் அவர்களே. மணிவிழா காணவந்திருந்த இலங்கை வானொலிப் புகழ் முன்னாள் மெல்லிசைப் பாடகர் திரு. கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார். முதலில் ஆசியுரையை அம்பிகை ஆலயகுரு சிவஸ்ரீ ச.சுகிதர்ச சர்மா அவர்கள் வழங்கினார். நூல் அறிமுகத்தினை தமிழாலய பாடசாலையின் ஆசிரியை திருமதி சித்திரா சுதேஸ்வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து யோ்மனி "மண்"கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் ஆசிரியரும் யோ்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவருமான திரு.வ.சிவராசா அவர்கள் நூலாசிரியரைப் பற்றிய அறிமுக உரையையும் வாழ்த்துரையையும் வழங்கிச் சிறப்பித்தார்.

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு பொன்.புத்திசிகாமணி அவர்களின் வாழ்த்துரையைக் கேட்ட பலர் சிரித்து மகிழ்ந்தனர். அனைவரையும் தமிழால் கட்டியணைத்து அற்புதமாகப் பேசினார். இடையிடையே தனது கருத்தையும் பாராட்டுரையையும் வழங்கிக் கொண்டிருந்த யேர்மனி தமிழ்க் கல்விச் சேவையின் தலைவர் தமிழ்மணி திரு பொ. சிறீஜீவகன் அவர்கள் நூல் ஆசிரியர் கல்விச் சேவையோடு இணைந்து பங்காற்றிய பல விடையங்களைச் சுட்டிக்காட்டிப் பாராட்டிப் பேசினார்.

மாரியம்மன் ஆலயபஜனைக்குழுவினர் சார்பில் திருமதி கலா யோகநாதன் அவர்கள் உரையாற்றினார். தாயக ஆலயங்களையும் புலம்பெயர் நாடுகளிலுள்ள ஆலயங்களின் சிறப்புக்களையும் சுட்டிக்காட்டிப் பேசினார். பஜனைப் பாடல்களைப்பாடி நூலாசியையை வாழ்த்திக் கௌரவம் செய்தது மறக்கமுடியாத விடையமாகும்.

நூலசிரியையின் தமிழ்பணியை வியந்து, நேசித்து அங்கு வந்திருந்த யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர் கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன் தித்திக்கும் தெய்வத் தமிழ்கொண்டு வாழ்த்துப்பா பாடி மடலைக் கையளித்துச் சிறப்பித்தார்

இந்த நூல் வெளியீட்டு விழாவில் மூன்று தலைமுறையினர் அதாவது மூத்த உறுப்பினர்கள்-குடும்ப உறவுகள்-இளைய தலைமுறையினர் என ஒன்றுகூடி விழாவைச் சிறப்பித்தமை பாராட்டுதலுக்குரிய விடையமாகும்.

நன்றியுரை என்ற விடையத்திற்கு வந்தபோது அந்த உரையை நால்வர் வழங்கினர். முதலில் நூலாசிரியை தனது உரையில் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எழுதி வருகிறேன். கணவரின் ஒத்துழைப்பு ஆதரவுதான் முக்கிய காரணம் என்றும் தொடர்ந்து இறக்கும்வரை எழுதிக்கொண்டிருப்பேன் எனவும் பேசினார்.

அடுத்து அவரது மகன் திரு. பார்த்தீபன் நன்றியுரை நிகழ்த்திய போது சபையோர் அவரது பேச்சைக் கேட்டு வியப்படைந்தனர். அவரைப் பாராட்டினார்கள். சபையே கலகலத்துக் காணப்பட்டது. அடுத்து நூலாசியையின் மருமகள் திருமதி அனிக்கா.பார்த்தீபன் அவர் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியாக இருந்த போதிலும் தனது நன்றி உரையில் தமிழ்க்கலாச்சாரத்தை விரும்பி ஏற்றுத்தான் இந்தக் குடும்பத்தில் இணைந்து கொண்டதாகவும்

இந்தவிழா தனது வாழ்வில் ஒரு வித்தியாசமான விழாவாகக் காணப்பட்டதாகவும் பாராட்டி நன்றிதெரிவித்துக் கொண்டார். அடுத்து நூலாசிரியையின் கணவரும் 60வது பிறந்தநாளை இன்றைய தினம் கொண்டாடியவருமான திரு பாலச்சந்தின் அவர்களும் விழாவிற்கும் வருகைதந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வாக இருந்ததாகவும், தனக்கு மட்டல்லா மகிழ்ச்சி எற்பட்டுள்ளது என்றும் தெரிவித்து நன்றி கூறினார்.

விழாவை முடித்து வைத்த திரு. பாலச்சந்திரன் தனது துணைவியாரின் கரங்களைப்பற்றி தன் வாழ்நாளில் சந்தித்த மிகப்பெருமை தரும் இவ்விழாவிற்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்த அத்தனை உள்ளங்களுக்கும் கண்ணீர் மல்க நன்றிகூறினார். விழாவில் கலந்துகொண்ட அத்தனைபேருக்கும் சிற்றுண்டி, மதியபோசனம் வழங்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் நல்லதொரு இலக்கியவிழாவாக நடந்து முடிந்தமை அனைவருக்கும் மகிழ்வைத் தந்தது என்றே கூறலாம்..... –ஆசிரியர்-

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2017 (அனுசரணை செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு : ரூபா 5000/=

இரண்டாம் பரிசு: ரூபா 3000/=

மூன்றாம் பரிசு: ரூபா 2000/=

ஏனைய ஏழ சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டிக்கான விதிகள் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் ”அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி” எனக் குறிப்பிடப்படல்வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி: ஞானம் அலுவலகம் – 3டீ, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06. போட்டி முடிவுத் திகதி 31.12.2017 முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. –ஆசிரியர்

# முதுமைத்தோற்றம் ஆரம்பிச்சுடுச்சா? கவலையைவிடுங்க..

இந்த உலகில் பிறந்த அனைவரும் எப்போதும் இளமையோடு இருக்கமுடியாது. ஆனால் முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் நல்ல ஆரோக்கியமான உணவுகளை உண்டதால், அவர்கள் நீண்ட நாட்கள் இளமையோடு வாழ்ந்தனர். தற்போதோ மக்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை மற்றும் உணவுகளை உண்பதால், அவர்கள் 30 வயதிலேயே முதுமைத் தோற்றத்தை அடைகின்றனர். அதிலும் முகத்தில், கழுத்தில் சுருக்கங்கள், கோடுகள் போன்றவை காணப்படுகின்றன. அவ்வாறு தோற்றமளிக்க ஆரம்பித்தால், கவலைப்படாமல் ஒரு சில உணவுகளை உண்டாலே அந்தத் தோற்றத்தை தடுக்கலாம். அத்தகைய உணவுகள் என்ன வென்று தெரிந்து கொண்டு அதனை தினமும் உணவில் சேர்த்துவந்தால், முதுமைத் தோற்றத்தை தள்ளிப் போடலாம்.

ப்ளூபெர்ரிஸ்

இந்த பழம் மிகவும் சிறந்த முகச்சுருக்கத்தை தடுக்கும்பழம். ஏனெனில் இதில் உள்ள ஆன்தோசைனோசைடு, முதுமைத் தோற்றத்தை ஏற்படுத்தும் முகச்சுருக்கம், பார்வை குறைவு போன்றவற்றைத் தடுக்கிறது. மேலும் இதில் 40% ஆன்டிஆக்ஸிடன்ட்கள் இருப்பதால், நோய் எதிர்ப்புச்சக்தி அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு, அழகாகவும் இருக்கும். அதுமட்டுமல்லாமல், அதில் இருக்கும் வைட்டமின் சி, உடலில் இருக்கும் கொலாஜென் உருவாக்கத்தை உறுதிப்படுத்துவதால், முதுமையைத் தடுக்கிறது.

தக்காளி :

இது மற்றொரு சிறந்த உணவுப்பொருள். இதனை உண்பதால் முகத்தில் இருக்கும சுருக்கங்கள் மறையும். மேலும் இதன் ஜூஸை முகத்திற்குத் தடவிவந்தால், முகமானது பளபளப்புடன் இருக்கும். ஏனென்றால் தக்காளியில் இருக்கும் லைக்கோபீன் என்னும் கெமிக்கல், முகத்தில் தோன்றும் கோடுகளைத் தடுப்பதோடு, செல்கள் பாதிப்பு மற்றும் சருமத்தோற்று நோய்கள் வராமலும் தடுக்கும்.

மீன்எண்ணெய் :

கடலோரப்பகுதிகளில் வாழும் பெண்கள் இளமையோடு காட்சியளிக்ககாரம் என்னவென்று தெரியுமா? ஏனெனில் மீன் மற்றும் மீன் எண்ணெயை அவர்கள் தினமும் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதால், சருமம் இறுக்கமடைந்து இளமைத் தோற்றதை அளிக்கிறது. அதிலும் குளிர்ந்த தண்ணீரில் வாழும் சாலமன், டுனா போன்ற மீனில்
அதிகமான அளவு ஒமேகா 3 ஃபேட்டிஆஸிட் இருப்பதால், சருமத்திற்குத் தேவையான எண்ணெய்பசை கிடைப்பதோடு, சுருக்கங்களும் மறையும்.

கிரீன் டீ :

பானங்களில் கிரீன்டீ மிகவும் ஆரோக்கியமானது. கிரீன்டீ குடிப்பதால் செரிமானத்தன்மை சரியாக நடப்பதோடு, உடல் எடையும் குறைந்து, முகச்சுருக்கமும் குறையும். முக்கியமாக முகச்சுருக்கம் வருவதற் டி.என்.ஏ பாதிப்பும் ஒரு காரணமாகும். இந்த டி.என்.ஏ பாதிப்பை கிரீன்டீ தடுக்கும். எனவே தினமும் ஒரு கப்கிரீன் டீ குடித்தால், முகம் அழகாக சுருக்கம் இல்லாமல் இருப்பதோடு, கூந்தல் உதிராமல், எடைகுறைந்துஸ்லிம்மாக அழகாக இருக்கலாம்.

சொக்லேட் :

ஃப்ளேவர் மிகவும் பிடிக்கும் என்றால் அந்தசாக்லேட் ஃப்ளேவர்சாப்பிடுபவர்களுக்கு ஒரு நல்ல செய்தி. சாக்லேட் சாப்பிட்டால், அதில் இருக்கும் கொக்கோ என்னும் பொருள், உடலில் இரத்த ஓட்டம் அதிகரித்து, சரும வறட்சி நீங்கி, சருமம் மென்மையாவதோடு, சுருக்கம் ஏற்படாமல் இளமைத் தோற்றத்தை தரும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆகவே தினமும் ஒரு சாக்லேட் சாப்பிடுங்க, இளமையோடு இருங்க. மேற்கூறிய உணவுப் பொருட்களையெல்லாம் சாப்பிட்டால், முதுமைத் தோற்றத்தை தடுக்கலாம். அது மட்டுமல்லாமல், தினமும்அதிக அளவு தண்ணீர் குடித்தாலும் சருமத்தில் சுருக்கம் ஏற்படுவதை தடுக்கலாம்.

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00Euro
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு - 480-00
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை-480-00
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
06. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
07. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
08. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 240-00
11. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 200-00
12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 31-08-2017 + 449-24

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு + 100-00

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

09. செல்வி அர்ச்சனா,செல்வன்கள் பிரணவன், பிரவீணன்
அம்பிகைபாலன் (பிறந்தநாள் அன்பளிப்பு) -Hamm + 300-00

09. திருமதி கிறசியல்லா சிவகாந்த் -Dusseldorf + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

---------

+ 1449-24

+ 1449-24

அனுப்பியது:-

| | | | |
|---|---|---|---|
| (1) ரூத் மிஷன் (சிறுவர் காப்பகம்) கிளிநொச்சி | | 740-00 | |
| (2) அன்பகம் (சிறுவர் காப்பகம்) வவுனியா | | 680-00 | |
| வங்கிகட்டணம் 2X35-00 | | 70-00 | |
| | | ------- | |
| | | 1490-00 | |
| வங்கிவரி 01.09.2017 -30.09.2017 | -10.30 | | |
| 01.10.2017 -31.10.2017 | -10.84 | | |
| | ----- | 21-14 | |
| | | ------- | |
| | | 1511-14 | - 1511-14 |
| | | | ---------- |
| 31-10-2017 மீதி கையிருப்பு | | | - 61-90 |
| | | | ----------- |
| | | | (மேலதிகசெலவு) |

## பிறந்தநாள் அன்பளிப்பு 300-00யூரோ

இந்த வருடம் தமது பிறந்தநாளைக் கொண்டாடிய யேர்மனி Hamm நகரைச் சேர்ந்த திரு,திருமதி இந்திரலஷ்மி-அம்பிகைபாலன் தம்பதிகளின் செல்வங்களான அர்ச்சனா, பிரணவன், பிரவீன் ஆகியோர் தாயக ஆதரவற்றோர் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக 300-00 யூரோக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இப்பணம் கிளிநொச்சி ரூத்மிஷன் சிறுவர் காப்பகத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம். இந்த மூவருக்கும் பெற்றோர்களுக்கும் மண் சஞ்சிகையின் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரன்புமிக்க மாணவமணிகளே, சிறார்களே, பெற்றோர்களே!...நீங்களும் உங்கள் பிள்ளைகளின் பிறந்தநாள் மற்றும் கொண்டாட்டங்கள் செய்யும்போது தாயக ஆதரவற்ற சிறார்களையும் நினைவில்கொண்டு அள்ளித்தராவிடினும் கிள்ளியாவது சிறிது தருவீர்களானால் அது பேருதவியாக அமையும். நன்றி!..

# RUTH MISSION

Jayapuram north,
Jayapuram.

E-mail : [illegible]
T.p : [illegible]

15-09-2017

[illegible]

[illegible]


[illegible] Phone [illegible] Viber [illegible]

[illegible] 2017 [illegible]

10-2-2017 - 77,760/-
18-5-2017 - 1,29,146/-
[illegible] 206,906

[illegible]



# Sri Shanmuga Girls' Home

No. 868

54, Vidyalayam Road,
Trincomalee, Sri Lanka.

Date: 19.2.017

Received with thanks From MR. N. Sivarajah
Germany
the sum of Rupees Eighty Five thousand five Hundred and forty five only
on account of donation for Home/ Celebration / Building fund by Cash / Cheque 85,545.00

Rs. 85545.00

V. Nadarajah
Manageress

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

76(34), Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.
026-2222521

Regd.No: NEP/PCC/C.H/31(1998.05.18)

76 (34) வித்தியாலய வீதி,
திருகோணமலை,
இலங்கை
026-2222521

திரு. வ. சிவராசா
பிரதம ஆசிரியர்
மண் சஞ்சிகை
ஜேர்மனி.

திகதி
Date [illegible]

அன்புடையீர்,

[illegible]

Credit [illegible]

[illegible]

நன்றி

[illegible]

Miss.S.Chithiravel
Attorney-at-Law
Trustee.

Miss.Y.Madarajah B.Sc
Manageress & Custodian Trustee.

# நோவா (Noah) அனுப்பிய காகம் போலானார் சம்பந்தன்.

நோவா என்பவர் ஒரு கப்பல் (Noah Ark) கட்டி பறவைகளை வெள்ளத்தில் அழியாது பாதுகாத்தவர் என்று பைபிள் கூறுகின்றது.ஒரு நாள் வெள்ளம் வந்தபோது நோவா ஒரு காகத்தினை அருகில் உள்ள தீவில் ஏதேனும் ஆபத்தாய் நடந்ததா என்று பார்த்துவர அனுப்பினார்.ஒரு மாதம் ஆகியும் போன காகம் திரும்பி வரவில்லை. ஏனெனில் அங்கு பல இறந்த பிணங்களைப் பார்த்துவிட்டு அதனை சாப்பிடுவதற்காக காகம் அங்கேயே நின்று விட்டது. நோவா சொன்னதையும் மறந்துவிட்டது.இறந்த பிணங்களைப் பார்த்த நோவா அனுப்பிய காகம் போல ஆகிவிட்டார் சம்பந்தன் இவரை வடகிழக்கு இணைப்பு கூட்டாட்சியை எடுத்துவர பாராளுமன்றத்திற்கு தமிழர்கள் அனுப்பினார்கள். இவர் எதிர்க்கட்சி தலைமையைக் கண்ட பின்னர், வடகிழக்கு இணைப்பையும் கூட்டாட்சி (சமஷ்டி) யையும் மறந்து விட்டு எதிர்க்கட்சி தலைமையில் அமர்ந்து விட்டார். இவருடைய மற்றைய எம்பிக்களும் நோவா அனுப்பிய காகம் போல ஆகிவிட்டார்கள். விலை போன தமிழ் எம் பிக்களும் அவர்கள் சிங்களத்திடம் இருந்து பெற்ற பதவிகளும் :

1. இரா சம்பந்தன் - எதிர் கட்சி தலைவர்.
2. செல்வம் அடைக்கலநாதன் - பிரதி தவிசாளர்
3. சுமந்திரன் - நிலையியல் கட்டளை
4. மாவை சேனாதிராசா-தெரிவுக் குழு
5. த.சித்தார்த்தன் - தெரிவுக் குழு, தவிசாளர் குழாம்
6. சி.யோகேஸ்வரன் -சபைக்குழு
7. சாந்தி சிறீஸ்கந்தராசா - பாராளுமன்ற அலுவல்கள், பொது மனுக்குழு
8. சரவணபவன்-சிறப்புரிமை பற்றிய குழு
9. க துரைரட்ணசிங்கம்- பொது மனுக்குழு
10. சிவமோகன்- பொது மனுக்குழு
11. ஞானமுத்து சிறிநேசன்-அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு
12. சி.சிறிதரன்-அரசாங்க கணக்குகள் பற்றிய குழு
13. சாள்ஸ் நிர்மலநாதன்-அரசாங்க கணக்குகள் பற்றிய குழு
14. ச.வியாழேந்திரன்-அரசாங்க கணக்குகள் பற்றிய குழு

விலை போகாத தமிழ் எம் பிக்கள்:

1. சிவசக்தி ஆனந்தன்
2. கோடீஸ்வரன்

Tamil Diaspora News 11-10-2017

# தமிழர் கலாச்சார நற்பணிமன்ற வாணிவிழா..

30.9 2017 அன்று எசன்நகரில் தமிழர் கலாச்சார மன்ற வாணிவிழா. மண்டபத்திற்குள் வரும்பொழுது மிருதங்கக்கச்சேரி நடந்துகொண்டிருந்தது. மிகவும் ரசிக்கக்கூடியமுறையில் வாசித்துக்கொண்டிருந்தனர் எசன் நுண்கலைகல்லூரி மாணவர்கள். சபையோர் எல்லாம் அமைதியாக ரசித்துக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அடுத்ததாக ஆசிரியை சஜினிவிஜயன் அவர்களின் மாணவிகளின் வயலின்இசை இடம்பெற்றது. வாய்ப்பாட்டு, நடனங்கள் எல்லாம் விதம் விதமாக நுண்கலைக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் பங்காற்றலில் சிறப்பாக இருந்தது. வீணைஇசை மனத்திற்கு மகிழ்வைக் கொடுத்தது.

அது மட்டுமல்ல மாணவர்களின் "கண்ணகி" நாடகம் எலோரையும் கவர்ந்தது மிகவும் ஆச்சரியம். அதிலும்அவர்களுடைய தமிழ் உச்சரிப்பு சுத்தமாக இருந்தது கவனிக்ககூடியதாக இருந்தது. இன்னுமொரு நாடகம் "நெல்லிக்கனி" அதுவும் மிகவும் அழகாக நேர்த்தியாகச் செய்தார்கள். மாணவர்கள் நெறியாள்கை நயினை விஜயன் உடைகள் கண்கவர் வர்ணத்தில் இருந்தன சபையோரை மிகவும் கவர்ந்தது. ஹம்காமாட்சி அம்மன் கோவில் பாஸ்கரகுருக்கள்,திருவள்ளுவர் பாடசாலை அதிபர் சிறிஜீவகன், இருவரும் ஆசியுரை வழங்கினார்கள்."பெற்றாரின் அறிவுரை இன்றைய சந்ததியினருக்கு வரமா?.. பாரமா?.. என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. பலசுவையான கருத்துகள் பரிமாறப்பட்டன. இன்றைய சூழ்நிலைக்கு ஏற்பதாகஇருந்தது.

தமிழகத்திலிருந்து வருகைதந்த திவ்யாகுரு அவர்களின் வாய்பாட்டு இசைக்கச்சேரி நடந்தது. மிகவும் நன்றாக இருந்தது.அவருக்குப் பக்கவாத்திய இசைக்கலைஞர்கள் அனுசாந்த் விஜயன்,நகுசாந்த் விஜயன்.இவர்கள் இருவரும் திவ்யாபாடும் போது தாளம் தவறாது மிகவும் நேர்த்தியாக வாசித்தார்கள். முக்கியமாக கவனிக்கக் கூடியதாக அவருடைய ஸ்வர வரிசைக்கு அவர்களது தாளம் சற்றும் பிசகாது ஒரேநேரம் ஒலித்தது மிகவும் அழகாக சரியாக இருந்தது ரசிக்கும்படி மனதுக்கு மகிழ்வைத் தந்தது. அவர்கள் இருவரும் எசன் நுண்கலைக் கல்லூரியின் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பரிசளிப்புடன் விழா இனிதே முடிவுற்றது. ஒரு இசை உலகில் இருந்த உணர்வுடன் நாமும் விடைபெற்றோம்.

கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி


# எனது மின்னஞ்சல் நண்பர்களுக்கும் இலக்கிய நண்பர்களுக்கும்...

தமிழ்நாடு - ஈரோட்டில் 2017 டிசம்பர் 6-7ம் திகதிகளில் நடைபெறவுள்ள புலம்பெயர்ந்தோர் எழுத்துலகம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளும் மாநாடு பற்றியும் அதில் இதுவரை வெளிவந்த எனது 10 நூல்கள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்து அதன் மீது கலந்துரையாடல் நிகழும்.


பி.கு: இந்நிகழ்வில் கொழும்பிலிருந்து வெளியாகும் 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர். திரு. ஞானசேகரன் எனது குதிரை வாகனம் நாவல் பற்றிய ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளார். எழுத்தாளரும் முன்னாள் வீரகேசரி பத்திரிகை நிருபரும் யேர்மனி எழுத்தாளர் சங்கத்தின் செயலாளருமான திரு. பொன். புத்திசிகாமணி அவர்கள் எனது 'மக்கள் மக்களால் மக்களுக்காக' நாவலுக்கான ஆய்வுக் கட்டுரையை ஸ்கைப் மூலம் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஈரோடு கலை- அறிவியல் கல்லூரியினர் தங்குமிட வசதியையும் செய்து தருகின்றார்கள். கலந்து கொள்ள முடிந்தவர்கள் கலந்து கொள்ளவும். பார்வையாளர்கள் ஆகவும் - பங்களிப்புச் செய்பவர்களாகவும்.

அன்புடன்
வி. ஜீவகுமாரன்
எழுத்தாளர்.டென்மார்க்
மின்னஞ்சல். jeevakumaran005@gmail.com




# நூல் அறிமுகம்...




பெற்றுக்கொள்ளலாம்.........

தொடர்புகளுக்கு..

c.gowry@yahoo.de
Tel 0212 - 22605546




balachandran57@yahoo.de
Tel 06834 - 69445



யேர்மனி எழுத்தாளர் சங்க உறுப்பினர் தமிழ்மணி திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்ட "கந்தலோக கலாபம்" என்னும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வு 15-10-2017



Wissen, Kultur & Literatur - கல்வி, கலை, இலக்கிய, சமூக இருமாத சஞ்சிகை

# ERDE

MANN

Germany / Ausgabe 186




வருட சந்தா.. யேர்மனி 15 யூரோ

ஏனைய நாடுகள் 20 யூரோ